Registered at the G. P. O. as a Newspaper ★ விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 விசுவாவசு வைகாசி 3 முஹர்ரம் பிறை 14 (16-5-65) ஞாயிற்றுக்கிழமை இதழ் 94

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்

வட்டமேசை மகாநாடு ★ பாகுபாடற்ற அரசாங்க சேவை ★ கட்டாய நாடு கடத்தல் கூடாது ★ இராணுவம் அகற்றப்படவேண்டும்

# சகல பிரஜைகளுக்கும் சட்ட மூலம் பாதுகாப்பு

## தமிழ்க்காங்கிரஸ் 20-வது மகாநாட்டுத் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஐ. நா. வின் மனித அடிப்படை உரிமை சாஸனத்திற்கிணங்க, இந்த நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு இனம், மதம், சாதி கொள்கை என்ற வேறுபாடு பாராட்டாதவகையில் நாட்டின் சகல பிரஜைகளுக்கும் சட்டத்தில் சமத்துவம் அளிப்பதை உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகள் அடங்கிய அத்தியாயம் ஒன்றை அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தில் சேர்ப்பிக்கவேண்டும் என்று நேற்று நடைபெற்ற அகில இலங்கை காங்கிரஸ் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற காங்கிரஸின் 20-வது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு:

### காங்கிரஸ் தீர்மானங்கள்

ஜனநாயக சக்திகள் சென்ற பொதுத் தேர்தலில் வெற்றி ஈட்டியதையும் இலங்கைப் பிரதமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பெற்றதையும் மகாநாடு வரவேற்கின்றது.

'முன்னேற்ற வீரர்கள்' என்ற போலி முகமூடியை அணிந்துகொண்டு பரிபூரண அரச ஆதிக்க மயத்தை உண்டுபண்ணி எதேச்சாதிகாரத்தை நிறுவி வகுப்புவாத உணர்ச்சியைக் கிளர்ச்சி செய்யமுயற்சி செய்ய தீயசக்திகளின் தோல்வியை வரவேற்கின்றது.

### ஜனநாயக சக்திகள்

சர்வாதிகாரப் போக்கை முற்றாக முறியடிப்பதற்கு மதம், இனம், மொழி என்ற வகையில் சிறுபான்மையினராயுள்ளவர்களின் பிரச்னைகளுக்கு நீதி நெறியானமுறையில் வழிவகுத்து ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு உறுதியாக்கப்பெறல்வேண்டும் என்றும் இவ்வகையிலே தான் இலங்கை வாழ் மக்களின் பொருளாதாரப் பொலிவும் பொதுநல விருத்தியும் அமைந்து பொருந்த உறுதி காண முடியும் என்றும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் இம்மகாநாடு தீர்மானித்திருக்கின்றது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்நிறுவப்பெற்ற காலம் தொடக்கமாக ஒற்றை ஆட்சி முறையிலே ஒன்றுபட்ட இலங்கை உருவாக வேண்டுமென்று ஐயந்திரிபின்றி வாதாடிவந்த வகையில் இலங்கை முழுவதிலும் எப்பாகத்திலும் மதம், இனம், மொழிவாரியாகவுள்ள சமூகங்கள் சம அந்தஸ்துடனும் கூட்டுப் பங்காளர்களாகவும் ஒரு பொதுப்பண்பாட்டின் அடிப்படையிலே சம வரிசையும் சமசந்தர்ப்பமும் பெற்றுத் தன்மானத்துடனும் பெருமையுடனும் வாழவேண்டும்—இல்லை வாழமுடியும் என்ற கட்சிக்கொள்கையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் நம்பிக்கையை மீண்டும் இம்மகாநாடு வலியுறுத்துகின்றது.

(10-ம் பக்கம் பார்க்க)

## தனிச்சிங்களத்தை ஏற்காத ஒரே கட்சி காங்கிரஸே

### உடுப்பிட்டி எம்; பி. பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் நேற்றைய மகாநாட்டில் பேசுகையில் கூறியதாவது:

"தனிச்சிங்களத்தை அன்றும் இன்றும் ஏற்காத ஒரே ஒரு கட்சி தமிழ்க்காங்கிரஸ தான். பாராளுமன்றத்துக்குள்ளேயும் சரி, வெளியேயும் சரி தனிச்சிங்களச்சட்டத்தை முழுமூச்சாக எதிர்த்து வந்தோம. இனிமேலும் தொடர்ந்து எதிர்ப்போம்.

இன்னும் இரண்டு மூன்று வருடகாலத்துக்குள் மொழிப் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் இலங்கையில், கடந்த 9 ஆண்டுகள் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடும். ஆதலால் தாமதிக்காமல் அரசாங்கம் உடனடியாகத் தீர்க்கவேண்டும்.

மாவட்டசபைகள் மூலம் நமது மொழிப்பிரச்னையை தீர்க்கமுடியாது. மாவட்ட சபை, மாநகர சபை போன்றது தான். இச்சபை மூலம் தமிழர்களின் பிரச்னைகள் எப்படி தீர்க்க முடியும்.

செனட் சபையில் மந்திரி திருச்செல்வம், தனிச்சிங்களத்தை ஏற்றுக்கொண்டதாக கூறினார். அவர் கூறியது தமிழினத்தின் சார்பில் அல்ல, தனிச்சிங்களத்தை தமிழ்க்காங்கிரஸ என்றும் எதிர்த்து வருகிறது."

### வவுனியா எம். பி. பேச்சு

"சமஷ்டிக் கட்சியினர், எதிர்க்கட்சியினருக்கோ, சிங்கள மக்களுக்கோ பயப்படவில்லை; ஆனால் தமிழ்க்காங்கிரஸ பாராளுமன்ற அங்கத்தவர்கள் மூவருக்கு மட்டுமே பயப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள், உண்மையை தமிழ் மக்களுக்கு கூறிவிடுவார்கள்" என்று வவுனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினார்.

"இருபது ஆண்டுகளுக்குமுன் தமிழ்க்காங்கிரஸின் முயற்சியினால் தான், இலங்கை அரசியல் சட்டத்தில் 29-ம் பிரிவு சேர்க்கப்பட்டது. பேச்சுரிமை, எழுத்துரிமை வழங்கும் 29-ம் பிரிவின் உதவியைக்கொண்டு இன்று எங்களை சமஷ்டியினர் தாக்கிவருகின்றனர். வட்ட மேசையில் கலந்துகொள்ள சமஷ்டியினர் ஏன் பயப்படுகிறார்கள்? தமிழர்களின் பிரச்னையைத் தீர்க்க அவர்கள் விரும்பாததிற்கு இது காரணம்

## தமிழரின் பிரச்னையை தீர்க்க சர்வகட்சி மகாநாடே சிறந்தது

### நல்ல தருணத்தை நழுவ விடக்கூடாது — ஜி. ஜி.

யாழ்ப்பாணம், சனி

"தமிழர்களை இன்று பல பிரச்னைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. இவற்றை வட்டமேசை மகாநாடு மூலம் தீர்த்துவைக்க மற்றைய கட்சிகளும் முன்வரவேண்டும். சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஐக்கியம் ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தை நாம் நழுவவிடக்கூடாது" என்று திரு. ஜி ஜி பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:

ஜனநாயகத்துக்கு எதிரான தனி ஆதிக்கத்தாக்குதல்களின் பின், நடந்த பொதுத்தேர்தலில் ஜனநாயக சக்திகளே வெற்றிபெற்று, ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதோர் நற்செய்தியாகும்.

### அரசாங்கத்தில் நம்பிக்கை

நாங்கள் ஒரு கட்சியானர் என்னும் அடிப்படையில், ஒருமைப்பட்ட இலங்கையில் ஒரு தேசிய அரசாங்கத்திலேயே நம்பிக்கைகொண்டிருந்தோம். அது நிறைவேறிவிட்டது என்றே சொல்லலாம். இனி, அந்தக் கொள்கையை எமது கொள்கையை ஈட்டுவருந்துவதற்கோ மாற்றுவதற்கோ ஒருவிதகாரணமுமில்லை.

பலவீனப்பட்ட இனத்தவரும், மதத்தவரும், மொழியினரும் வாழும் இந்நாட்டில் ஒற்றுமையான கொள்கையுடையவர்களால்தான் சுயமரியாதை, சுயகௌரவம் பேணுவதை நிலைக்கமுடியும்.

மொழிப்பிரச்னை ஒன்றே இலங்கையில் உறுதியான ஒருமைப்பாட்டுக்குப் பெருந்தடையாகவிருந்தது. ஆள்பவருக்கும், சட்டத்துக்கும் மொழி முக்கியமானது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது. உண்மையான சுதந்திரநாடாக இலங்கை விளங்கப்படின், அங்கு பல பிரிவுடைய மக்கள் தம்முடைய மொழியைப்பற்றி வருந்துகின்ற நிலை ஏற்படக்கூடாது. ஆதலால் தமிழ் மொழியின் முழு உரிமைகள் தமிழர்களுக்கும், சிங்கள மொழியின் முழு உரிமைகள் சிங்களவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்றும் அதற்கான நன்நோக்கங்கொண்ட திட்டங்களை வகுத்து முழுமனதோடு

(10-ம் பக்கம் பார்க்க)

## பிரச்னைகளைத் தீர்க்க கட்சி முழு முயற்சி எடுக்கும்

### காங்கிரஸ் காரியதரிசி அறிக்கை

காங்கிரஸ காரியதரிசி திரு. ரி. சங்கரப்பிள்ளை சமர்ப்பித்த அறிக்கை வருமாறு:

'இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களாகிய இந்தியர்கள், இலங்கையர், தமிழர்கள் யாவரின் அரசியல் சமூக நன்மைகளுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் மிகமுக்கியமாக அரசியல் அமைப்பில் தேவையான உரிமைகளைப் பெறுவதற்காகவும் 1944-ம் ஆண்டு திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் திரு. ஐ. எச். பெரேரா திரு. ரி. பி. ஜயா முதலியோர் ஸ்தாபித்தார்கள் என்பதை இந்நேரம் நினைவுக்கு கொண்டு வருதல் எமது கட்சியின் வரலாற்றின் முகவுரையாக அமையும்.

இக்கட்சியின் ஆரம்பகாலத்தில் எமது தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சட்டசபையில் பத்துவருட அனுபவமுடையவராக இருந்தமையாலும் இவருடைய பேச்சுவன்மையையும் செயல் திறமையையும் நன்கு அறிந்து - இவரை 1944-ம் ஆண்டு இந்தியர் இலங்கையர் தமிழர்கள் யாவராலும் ஏகமனதாகத் தெரிந்தெ

(10-ம் பக்கம்பார்க்க)

கள்தான் உண்டு, ஒன்று வட்ட மேசைமகாநாடு நடைபெற்றால், அங்கே தமிழினத்தின் ஒரே குரலாக திரு. பொன்னம்பலத்தின் குரல்தான் ஒலிக்கும் என்ற அச்சம். மற்றது வட்டமேசை மகாநாடு மூலம், தமிழர்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட்டால் தாங்கள் தொடர்ந்து தேர்தல்களில் வெற்றிபெற முடியாதென்றவலை" என்றும் அவர் கூறினார்.

ஈழநாட்டில் உங்கள் இராசிபலன்கள்

28-5-65 முதலாக தொடர்ந்து வெளிவருகின்றது

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுகின்றார்.

உங்கள்பிரதிக்கு ஏஜண்டுகளிடம்பதித்து கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் விரும்பிய இல்வாழ்க்கை

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்கிருர் வள்ளுவர். பண்பும் பயனும் அறிந்து வாழ்ந்தார்கள் பழந்தமிழ்ப் பெண்கள். வீட்டில் எத்தனை பணியாட்கள் இருப்பினும் தாமே தாம்கொண்ட கொழுநனுக்கு அரும்பணி புரிந்து இல்லற இன்பம் கண்டார்கள். கணவன் இன்சுவை உணவு உண்டு திருப்தி அடைய வேண்டுமென்று விரும்புகிருள் தலைவி. அவள் புகுந்த இடத்தில் செல்வங் கொழிக்கிறது. அவள் காலால் இடும் கட்டளைக்குக் காத்துக்கிடக்கிருர்கள் பணியாட்கள். தானே தன்கையால் சுவைத்துப் போடுவதையன்றே கணவன் விரும்புவான் எனக் கருத்தில் கொண்டு இனிய புளிக்குழம்பு சமைக்கிருள் தலைவி.

முளிதயிர் பிசைந்த
காந்தள் மெல்விரல்
கழுவுறுகலிங்கம் கழா
அது உடு இக்
குவளையுண் கண் குய்
புகை கமழத்
தான் துழத்தட்ட
தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன்
உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்து
தன் ஒண்ணுல் முகனே.

தலைவி தன் காந்தள் மலர் போன்ற கைகளால் கட்டித்தயிர் பிழிகிருள். குவளை மலர்போன்ற கண்களைபுகை வருடுகிறது. அதையும் பொருட்படுத்தாது புளிக்குழம்பு சமைக்கிருள். இந்த நிலையில் அணிந்திருந்த பட்டாடை மார்பினின்றும் நழுவுகிறது. அந்தவேளையில் ஆடையைச் சரிசெய்தால் புளிக்குழம்பு பதம் கெட்டு விடுமே என்று கருதி கைகழுவாமலே சரி செய்கிருள் தலைவி. இவ்வளவு கருசினையோடு சமைத்த உணவையுண்டு களிக்கிருன் தலைவன். நன்றென்று கூறிப்புகழும் ஓர் சொல்லில் எந்தனையின்பம் காண்கிருள் தலைவி.

இன்றைய நாகரிகப்பெண் பணியாளர்களிடமே குடும்பப் பொறுப்பெல்லாம் கொடுத்து விடுகிருர்கள். கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பணிப்பெண்கள் ஆக்கிப்படைக்கிருர்கள். ஏன் இன்றைய பணிப்பெண்கள் பலர் வீட்டுத்தலைவிகளாக மாறும் விந்தைக்குக் கூட இதுவே காரணம்.

செல்வக் குடும்பத்திற் பிறந்து செல்லமாக வளர்க்கப்பட்ட பெண் திருமணம் புரிந்து கணவன் இல்லம் ஏகிருள். அதிருஷ்டவசமாக வறுமை பீடிக்கிறது. பெண்ணை அழைத்து வரும்படி பெற்ருேர்கள் அவள் தோழியை அனுப்புகிருர்கள். அவளின் நிலைகண்டு தோழி துடிக்கிருள். பிறந்தகம் வரும்படி வற்புறுத்துகிருள். தன்நிலைமைகண்டு பரிதவிக்கும்தோழிக்குஇரங்குகிருள் தலைவி. என்கணவர் பிறந்தகத்துச் செல்வத்தை அனுபவித்துக்கொண்டிருப்பது தவறுஎன்று கருதுவார். பிறந்தகத்துச் செல்வத்தை நான் அனுபவிக்க வேண்டுமானுல் அவரை விட்டு நான் பிரியவேண்டும். அப்படிநான் அனுபவிக்கும் செல்வத்திலும் பார்க்க வறுமையில் தோய்ந்து வாழும் வாழ்க்கை மிகவும் நல்லது என்ற கருத்தை வெளியிடுகிருள் தலைவி.

இராமழை பெய்த ஈரா
வீரத்துச் செங்கோல்
வேந்தன் உழவனுகிப்
பனைநுகங் கொண்டு
யானைஞர் பூட்டி
வெள்ளி விதைக்கப்
பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத்
தீண்டிய வாழ்வே
செங்கேழ் வரகுப்
பைங்குரல் கொய்து
கன்று காத்துக் குன்றில்
உணர்த்தி ஊடுபதர்
போக்கி முன் உதவினேர்க்
குதவிக் காடுகளில்
இன்பதனம் பாடு
பார்த் தெடுத்துக்
குப்பைக்கீரை உப்பின்றி
வெற்று இரவுற்றலும்
விரையுடன் எடுத்து சோறு
கொண்டுபிற லடைத்து
ஒன்றுவிட்டொரு
பொழுது தின்றே
கிடப்பினும்
நன்றே தோழி,
நம் கணவன் வாழ்வே.

இந்தச் செல்வச் செழிப்பில் வாழ்ந்த நங்கை புக்ககத்தில் வாழும் வாழ்க்கையைப் பாருங்கள். உணவுக்கு நெல்லில்லை. சமைப்பதற்கு விறகில்லை. காடுகளில் தானே சென்று விறகு தேடி எடுத்துச் சமைக்கிருள். சமைக்கிறது வரகு. இந்தவரகு சோற்றிற்கு கறி என்ன? குப்பைக்கீரை. இந்த நிலையிலும் இந்தப் புதுமைப்பெண் "நன்றே தோழி நம் கணவன் வாழ்வே" என்கிருள்.

இன்றைய சமூகத்தில் இளைஞர்கள் படும் பாடு- ஆடம்பர வாழ்க்கைக்கு அடிபணியும் நங்கையர்கள் தம் கணவனை எத்தனை கஷ்டப்படுத்துகிருர்கள். வரவுக்கு மிஞ்சிய செலவினுல் கணவன் கடனுளியாகிருன். குந்தியிருக்க நிலமின்றித் தெருத்தெருவாய் அலைகிருன். கடன்பட்டேனும் கணவன் சொகுசான உடை, உணவு வழங்கும் வரை கணவனேடு ஒட்டிவாழ்கிருர்கள். நிலைமை மாறியதும் பிறந்தகத்துச் செல்வம் அனுபவிக்க கொண்டகொழுநனை தவிக்கவிட்டுச் செல்லும் நங்கையர்கள் பலர். கொண்ட கொழுநன் வாழ்நாள் முழுவதும் சஞ்சலத்தோடு வாழ்கிருன். இந்த நிலையில் இல்வாழ்க்கைப் பண்பு அமைவதெங்கே? உதட்டுப் பூச்சுக்கும் உல்லாச வாழ்க்கைக்கும் உழைத்துப்போடும் கணவன்மாரின் உடல்நிலைபற்றி இந்தப் பெண்மணிகள் கவனம் செலுத்துவதில்லை. முன்னைநாள் மாதர்கள் புத்தகப்படிப்பு இல்லாவிட்டாலும், உலகியலறிவு நிரம்பியவர்கள். இன்றைய மாதர்கள் புத்தகப்பூச்சிகளேயன்றி உலகியல் அறிவற்றவர்கள். அனுவசியமான அலங்காரங்களையெல்லாம் நாகரிகமென்று ஏற்றுக்கொண்டு காலத்தையும் நேரத்தையும் வீணுக்குகிருர்கள். இன்றைய ஒவ்வொரு பெண்மணியும் புதுமைப்பெண்ணுகமாறும் நாள் எந்நாளோ!

—கனகலிங்கம் —

# அரண்மனை ராணிகள்

### பிரான்ஸ் ராணி ஜோஸபைன்

ரான்ஸ் தேசத்திற்கு நெப்போலியன் சக்கரவர்த்தியாகி கீர்த்தியுடன் ஆட்சி புரிந்தான். இவன் மிகுந்த பராக்கிரமசாலி. இந்த நெப்போலியன் முதலில் ஒரு சாதாரண சேனைத் தலைவனுக இருந்தான். அப்போது ஜோஸபைன் என்ற ஒரு பெண்ணை மனம் விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டான். அவள் நல்ல அழகு வாய்ந்தவள். பண்பாட்டிற்கும் நல்லொழுக்கத்திற்கும் இருப்பிடமானவள். ஜோஸபைனுக்கு இதுஇரண்டாவது திருமணம். முதல் கணவனுக்கு இரு குழந்தைகள் பிறந்த பிறகு அவன் இறந்துவிட்டான். பின் நெப்போலியனை மணந்து கொண்டாள். இருவரும் நகமும் சதையுமாக அன்பாக வாழ்ந்தனர்.

சில வருடங்களின் பின் நெப்போலியன் பிரான்ஸ் தேசத்தின் சக்கரவர்த்தியாகப் பிரகடனப் படுத்தப்பட்டான். அப்போது ஒரே வகையில் இரண்டு தங்க மகுடங்கள் செய்வித்து, ஒன்றைத்தானும் மற்றென்றை ஜோஸபைனுக்கும் அணிவித்து சட்டரீதியாக அவளையும் பல எதிர்ப்புகளுக்கிடையில் அரசியாக்கினுன்.

ஆனுல் துரதிஷ்டவசமாக ஜோஸபைனுக்கு குழந்தைகளே பிறக்கவில்லை. அதனுல் நெப்போலியனுக்கு தன் சந்ததியைப் பற்றி மிகவும் வருத்தம் உண்டாயிற்று. தன்னுடன் தன் வம்சம் அழிந்துவிடுவதை நெப்போலியனும், பிரான்சுமே விரும்பவில்லை. ஆகவே நெப்போலியனை மீண்டும் திருமணம் செய்து கொள்ளுமாறு பிரான்ஸ் மக்கள் பலமாக வற்புறுத்தலாயினர். நெப்போலியன்பாடு இரு தலைக்கொள்ளி எறும்பு போலாயிற்று. ஒருபுறம் தன் உயிருக்குமேலாகக் கருதும் அன்புமனைவி ஜோஸபைன், மறுபுறம் தாய் நாட்டின் அரசையும், தம்வம்சத்தையும் விளங்க வைக்கும் ஒரு வாரிசு.

பல நாட்கள் ஊண், உறக்கமின்றிச் சிந்தனை வயப்பட்டபின் நெப்போலியன் நாட்டிற்காக தன் மனைவியைத் தியாகம் செய்யத் தீர்மானித்து விட்டான். உத்தமி ஜோஸபைன் கணவன் சுகமே தன் சுகம் என்ற கொள்கையைச் சதாகடைப்பிடித்து வாழ்ந்தவள். மன்னனின் இந்தத் தீர்மானத்தைக் கேட்டு கலங்கினுள். எனினும் விரைவிலேயே மனதைத் தேற்றிக் கொண்டாள். சற்றும் தயங்காமல் அரசசுகத்தை தியாகம் செய்ய முன்வந்ததோடு நில்லாமல் தானே முன்னின்று தன் கணவனுக்கு ஆஸ்திரிய நாட்டு இளவரசியான மேரீ லூயி ஸாவை மணம் முடித்து வைத்தாள். ஜோஸபைன் இறக்கும் போதும் நெப்போலியனிடம் அவள் அன்பு மாறவில்லை. "ஆருயிர்நெப்போலியனே என்று கூறிக் கொண்டே ஆவி துறந்தாள். மன்னனுக வாழ்ந்து தீவாந்திர தண்டனை பெற்று கண்காணுத இடத்தில் மரித்த நெப்போலியனும் இறுதியாக "பிரான்ஸ்! என் அன்பே ஜோஸபைன்" என்று கூறினுனெனில் இந்தத் தம்பதிகளின் அன்பு எப்பேர்ப்பட்டதாக இருக்க வேண்டும்.

### ஈரான் ராணி சுரையா:-

ஈரான் நாட்டைதற்போது ஆண்டு வரும் பஹ்லவி வம்சத்து மன்னனுக்கு இருபதாவது வயதிலேயே திருமணம் நடைபெற்றது. பதினுன்கு ஆண்டு வாழ்வில் அந்த அரசிக்கு மூன்று பெண்குழந்தைகளே பிறந்தன. மூன்ரும் குழந்தை பெண்ணுகப் பிறக்கவே அரசன் கலவரம் அடைந்தான். ஏனெனில் அந்த நாட்டுச் சட்டப்படியும், மதவழக்கப்படியும்பெண்கள் அரசுரிமை பெற அருகதையற்றவர்கள், ஆகவே மன்னன் அரசியை பலவந்தமாக விவாகரத்து செய்து விட்டுத் தன் மனத்திற்கிசைந்த உலகிலேயே மிக அழகியாகக் கருதப்பட்ட யுவதியான சுரையா என்னும் நற்குணமும் நல்லொழுக்கமும், நற்பண்பும் வாய்ந்த மங்கையை மணந்து கொண்டான்.

இவ்விரு மனமொத்த தம்பதிகளும் ஏழு ஆண்டு காலம் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்ந்தார்[illegible] மன்னனுக்கும் வயது நாற்பத்திரண்டாகி விட்டது, மன்னன் மனத்திரையிலே அரசுரிமைக்கும் வம்சவிருத்திக்கும் காரணமான வாரிசைப்பற்றிய சிந்தனை தீவிரமாக நிழலாடியது. என்ன செய்வான், பாவம்.

சுரையாவுடன் மேலும் ஏழு ஆண்டுகள் வாழ்க்கை நடத்தியே தீரவேண்டும். இது ஈரான் நாட்டுச் சட்டம். ஒரு கணவனே மனைவியோ திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் விவாகரத்துச் செய்யலாம். சுரையாவை விவாகரத்து செய்தாலொழிய மன்னன் மீண்டும் மணம் புரிய சட்டம் தடையாக நின்றது. இந்நிலையில் நின்று அரசன் தத்தளித்தான்.

முடிவில் வேறு வழியின்றி தன் மனதிற்கினிய அரசி சுரையாவை விவாகரத்துச் செய்யத் துணிந்து விட்டான்மன்னன். சுரையாவும், மன்னனுக்கும் நாட்டிற்கும் நலம் விளையும் பொருட்டுக் கொந்தளிக்கும் உள்ளத்தோடு தன் அரச வாழ்வைத் தியாகம் செய்து விட்டாள். விவாகரத்து செய்ய வைத்த கொடிய விதியைக் குறித்து மிகுந்த மனக்கசப்புடன் உள்ளம் உருக மன்னன் (ஷா) உலகெங்கும் பகிரங்கமாகத் தெரிவித்தான். சுரையாவை விவாகரத்து செய்த சில மாதங்களில் மன்னன் கடமையின் பொருட்டு ஃபாரா டீபா என்ற இருபத்தொருவயது அழகியை மணம் புரிந்தான். அரசனின் நல்ல காலத்தால் ஓராண்டு காலத்தில் அழகும் ஆரோக்கியமுமுள்ள ஆண் குழந்தை பிறந்தது. ரேஸா ஷா என்ற அந்தக் குழந்தைக்கு 1961-ம் ஆண்டு 31-ம் திகதி அக்டோபர் மாதம் ஒரு வயதாகியது,

பண்பும் அழகும் இருந்தும் அரசியாக வாழ்க்கைப்பட்டும் அரும் பெரும் அன்புக் கணவனை அடைந்தும் ராணிசுரையாவுக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தை யார் தான் சகிப்பார்கள்?

### எகிப்து ராணி நாரீமன்:

நாஸரின் ராணுவ புரட்சியால் எகிப்து நாட்டை விட்டு ஓடிய மன்னன்தான் பரூக். இவருடைய மனைவி நாரிமன் .கானம் ஸாதிக்கிள். பரூக் மன்னன் மிகவும் கொடுங்கோலாட்சி செய்து வந்தான். மருந்துக்குக் கூட நல்ல குணமோ பண்பாடோ அற்ற இந்தக் கொடுங்கோலன் சகலவிதமான கெட்ட பழக்கங்களுக்கும்அடிமையானவன். இந்த எதேச்சாதிகாரமன்னனுக்கு முதல் மனைவி மூலம் பெண்களே பிறந்தனர். இந்தநாட்டிலும் பெண்ணுக்கு அரசுரிமை கிடைக்காததால் இவன் தன் முப்பத்தைந்தாம் வயதில் 17 வயதே நிரம்பிய சிறுமியாகிய நாரிமனை பலவந்தமாக மணந்து கொண்டான். நாரிமனுக்கு திருமணம் ஆன அடுத்த ஆண்டே ஓர் அழகிய அரசிளங்குமரன் பிறந்தான், அக்குழந்தைக்கு அஹமத் பாட் என்று பெயரிட்டனர். எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர், பாவம் நாரிமன் மட்டும் அதில்பங்குகொள்ள முடியவில்லை. காரணம் சிற்றின்பமும் சூதாட்டமும்குடியுமே தன் வாழ்க்கையின் குறிக்கோளாய்க் கொண்டிருந்த ஓர் அரக்கனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்த அபலை நாரிமன் உள்ளம் துடித்து கண்ணீர் பெருக்காத நாட்களே இல்லையாம்.

இத்துயரைத் துடைப்பது போல் பாரூக்கை எதிர்த்து மக்கள் புரட்சி செய்தனர். வீறுகொண்டெழுந்த மக்களது உள்ளக் கொதிப்பைக் கண்டு, கீரியைக்கண்டுஅடங்கும் அரவத்தைப் போன்று நடுங்கிய மன்னன் எகிப்து நாட்டைவிட்டே தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என இத்தாலி தேசத்திற்கு ஓடிவிட்டான். எகிப்தை விட்டு வெளியேறும் போது மூன்றுவயதுப் பாலன் அஹமத்பாட்டையும் தன்னுடனேயே அழைத்துச் சென்று விட்டான். இதற்[illegible] சில மாதங்களுக்கு மு[illegible]ன் நாரிமனே வியக்கும் [illegible]ண்ணம்பலமுறை அவள்கேட்டபோதே மறுத்து வந்த மன்னன் தானுகவே முன் வந்து அவளை விவாகரத்து செய்து விட்டான்.

பெற்ற மகனை மன்னன் தன்னுடன் இத்தாலிக்கு அழைத்துச் சென்ற போது நாரிமன் திடுக்குற்று கலங்கினுள் குழந்தையைப் பிரிய மனமில்லாமல் இத்தாலி செல்ல விரும்பினுள். ஆனுல் எகிப்தியமக்கள் அவளைத் தடைசெய்தனர். நாரிமனை ஒரு பொம்மை ராணியாகவே ஏற்கத்தீர்மானித்து ஆட்சியை பொறுப்பு வாய்ந்த மந்திரியிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தனர். இதை நாரிமன் மறுத்துவிட்டாள். ஆகவே முதலில் பதவியைத் துறக்க ஏழைப் பிரசையான நாகாப் என்னும் டாக்டரை மணந்துகொண்டாள் மூன்றுமாதம்கழித்து விவாகரத்து கோரினுள். இதை அவளுடைய கணவன் நாகாப் மறுத்து விட்டார். நீதிமன்றமும் விவாகரத்து வழக்கை ஏற்கவில்லை,

பாவம்! நாரிமன் என்ன செய்வாள்! நாகாவைவிவாகரத்து செய்யாமல் எகிப்தை விட்டு வெளியேறவும் சட்டம் தடைசெய்தது. குற்றம் புரிந்தவர் ஓடுவது போல் தாயுடனும் ஒருசில சிநேகிதிகளுடனும் இரகசியமாக மறைந்து இத்தாலி சென்று பல இன்னல்கள் அனுபவித்தாள். இத்தாலியில் நாரிமன் சில மாதங்கள் தங்கியும் மைந்தனைக் காண்பது எளிய செயலாக இல்லை, அஹமத் பாட்டை சுற்றி காவல் பலமாக இருந்தது. சகல வசதிகளும் பெற்ற அரண்மனையில் வளரும் அவனை எவ்வாறு காண்பது? எகிப்து மக்கள் நாஸர் மீது வெறுப்புக் கொண்டு தாம் இறந்தாலும் தன் மகனுக்கு முடிசூட்டுவார்களாம் என்றே பலத்த காவல்களுக்கிடையே மகனை வளர்த்து வருவதாக பாரூக் கூறுகிருராம்.

நாரிமன் ஒருவாறுஇறைஞ்சியபின் மனமிளகிய பாரூக் அவளைத் தன் மைந்தனைக் காண இருமுறை அனுமதியளித்தாராம்! அதுவும்பலர் முன்னிலையில்! பத்துநிமிடங்கள் மட்டும்! அப்போது பாட் தன் தாயைப் பார்த்து "இவ்வளவு அன்போடு பரிசுகள் தருகிருயே! நீ யார்?" என்று கேட்டானும். அப்போது அந்தத் தாயின் உள்ளம் எப்படி வேதனை அடைந்திருக்கும். அதுவே கடைசியாகக் கண்டது. ஏழு ஆண்டுகள் சென்றும் இன்னும் மகனை அவள் காணவில்லையாம்.

நல்லை அமிழ்தன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருத்தான் வருத்தவழி

— ஆர். சி. சுப்பிரமணியம் —

...நதப்புலவர் தங்கமான குணம்படைத்தவர்; அன்றியும் சகல நூற்பயிற்சி மிக்கவர். அக்காலத்தில் அறிவாளருக்கு வாழ வழி கிடையாது. சரஸ்வதிகடாட்சமுடையவரை இலக்குமிதேவி கடைக் கண்ணாலும் பார்ப்பதில்லை என்று கூறுவார்களே! இவ்வுரை புலவருக்கு விதிவிலக்கல்ல. புலவருடன் வறுமையும்கூடவே பிறந்து நன்கு வளர்ந்து வந்தது.

உத்தமி ஒருத்தியுடன் இல்வாழ்வு வாழ்ந்த புலவருக்கு இறைவன் மக்கட்செல்வத்தைமனமார வழங்கியிருந்தான். சுருங்கச் சொன்னால் புலவர் குசேலர் வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஆனால் இவருடன் கிருஷ்ணபகவான் ஒரு சாலையில் படிக்காதது தான் ஒரே ஒரு வித்தியாசம். வறுமை வாட்டியது. புலவர் திகைத்தார்.

எவ்வாற்றானும் பொருள் தேடவேண்டிய நிலையை நன்குணர்ந்த புலவர் தன் சென்ம ஊரில் அறநெறிக்கமைவாகப் பொருள்தேடுவது அசாத்தியம் என்பதையுணர்ந்து வேற்றூர் செல்ல முடிவு கட்டிவிட்டார்.

ஒரு நாள் மாலை நாலு மணிக்குப் புறப்பட்டேவிட்டார். கையில் பொருளின்றி பாதயாத்திரையாகப் புறப்பட்டுவந்த புலவருக்கு அடர்ந்த காட்டுப் பாதை சற்றே பயத்தை வருவித்தது. திடத்தை வருவித்துக்கொண்டு விரைவாக நடந்தார். இரவு ஒன்பது மணி. ஒரு கிராமம் தென்பட்டால் அங்கு இரவைக் கழிக்கலாம் என்று அங்கலாய்த்தார். ஆனால் அவரது வாழ்வுபோல், வந்த வழியும் இருளடைந்துவிட்டது, வழியில் சிலர் சம்பாஷிக்கும் குரல் கேட்டு மனத்தைரியமடைந்தார்.

ஒரு கள்வர் கோஷ்டியினர் வந்துகொண்டிருந்தனர். கள்வர் தலைவன் புலவரைக் கண்டான்; வெருட்டினான். நிலைகுலைந்த புலவர் தன் வரலாற்றையும் அன்றைய பிரயாணத்தின் நோக்கத்தையும் அடக்கத்துடன்-உருக்கம் ததும்பக்கூறினார்.

"ஆம், நாங்களும் வாழத்தான்-உடையவர்களிடம் கன்னம் வைத்துக்களவுசெய்கின்றோம். கடவுள் அருளால் செல்வராக வந்தவர்கள், அச்செல்வத்தை உன்போன்றவர்களுக்கோ எம்போன்றவர்களுக்கோ பகிர்ந்தளிப்பதில்லை. ஆகவே நாம் களவுசெய்து வாழ்கின்றோம். முதலில்லாத இத்தொழிலைப் பண்புடன் நடத்துகின்றோம். புரிந்ததா வா-எம்முடன். ம்-நட! உனக்கும் எமக்குக் கிடைப்பதில் உரியபாகம் கொடுக்கப்படும்." இஃது கள்வர் தலைவன் கூற்று. திகைத்த புலவர் திடுக்குற்றார். வேறு வழியின்றி தயங்கிய புலவரின் கால்கள் கள்வர் கூட்டத்துடன் நடந்தன.

அன்றிரவு சுமார் ஒருமணிக்கு இக்கள்வர் கோஷ்டியினர் ஒரு ஜமீந்தார்வீட்டுக்கு கன்னம் வைக்கத்திட்டமிட்டிருந்தனர். திட்டமிட்டால் அதன்படி நடந்தேதீரும். இக்கோஷ்டியினர் தமது தொழிலில் கை தேர்ந்தவர்கள்.

ஊர் அடங்கிவிட்டது. கள்வர் கோஷ்டி பின் வேலியால் சென்றது. இரவு ஒரு மணி, தலைவன் கட்டளைப்படி நால்வர் சென்று கட்டடத்தின்சுவர் ஒன்றைக் கன்னம் வைத்து ஓர் ஆள் உட்புகக் கூடிய அளவுக்குப் பிரித்து சுவர்க்கற்களை எடுத்தனர்.

ஒருவன் உட்சென்று பொருட்களை எடுத்தெடுத்து (போல) கொடுக்க வெளியே நிற்பவர்கள் வாங்கி அடுக்குவார்கள். சில சமயங்களில் உள்ளே சென்று பொருட்களை எடுப்பவன்பாடுதான் பெரிய ஆபத்தில் முடிவதுண்டு.

"டே - கிழவன் - போ உள்ளே எல்லாத்தையும் வெளியாலே கொடு. இனி முடியாதென்றமட்டில்வெளியாலே வா- பயப்படாதே! நாம் இங்கு நிற்கின்றோம்."

'புலவர் தயங்கமுன், சிலர் அவரைப்பிடித்து உள்ளே தள்ளிவிட்டனர். புலவருக்கு மனச்சான்று என்று ஒன்று இருந்திருக்குமேயாகில் அது கொல்லப்பட்டே விட்டது. புலவர் தன்னிலையை உணர்ந்து நடக்கமுற்பட்டார். அறையுள் உள்ள பொருட்களை இருட்டில் கையால் தடவிப்பார்த்தார். பொறுக்கி எடுத்துக்கொடுக்கலாமோ என்றால் விஷயம் முழு ஏமாற்றமாகிவிட்டது. அதாவது இவர்கள் கன்னம் வைத்த அறை பொருட்கள் சேமிக்கப்படும் களஞ்சியமல்ல. பின் படுக்கை அறை. அதுவும் ஜமீந்தார் துயிலும் அறை. புலவருக்கு ஜமீந்தார் மூச்சுவிடுமரவமே கேட்கிறது. புலவர் புதுக்கள்வன்! பாவம்! புலவர் செய்வதறியாது கட்டிலின் கீழ் பதுங்கிக்கிடந்தார். குழந்தைகள் தவழுவதுபோன்று புலவர் கட்டிலின் கீழேயிருந்தார். 'தருமர் பொறியுள் எலி அகப்படுமே;' அதுபோல,

பஞ்சணையில் துயிலும் அந்த வீட்டு எசமானர் நல்லவர். படித்த மனிதர். பண்புள்ளவர். சமயப்பற்றும் நன்கு அமையப்பெற்றவர்.

அரவம் கேட்டோ, அன்றியோ ஜமீந்தாரின் துயில் முறிந்தது. அன்று பகல் நெட்டுருப்பண்ணிய ஒரு சிறந்த பாடலின் ஈற்றடி ஞாபகத்திற்கு வரமறுக்கவே அப்பாட்டில் முதல் மூன்று வரிகளையும் பலமுறை பஞ்சணையில் படுத்த நிலையில் சொல்லிச்சொல்லிப் பார்த்தார் ஜமீந்தார். பன்னி பன்னிப்பார்த்தும் பாடல் வரமறுத்தது.

கலையுணர்வும் புலமையும் மிக்கவராய் புதிய கள்வர் தன்னிலையை மறந்து, அவதியுற்றவரின் கடைசிவரியை அபுத்திபூர்வமாகக் கூறிவிட்டார்.

'யார் அது' என்றுகேட்டபடியே ஜமீந்தார் இறங்கி கட்டிலின் கீழ் மின் வெளிச்சத்தை எடுத்து அடித்தார், புலவரும்தவழ்ந்து வெளியே வந்து தன் வரலாற்றைக் கூறினார்.

(அரவம் சம்பாஷணையாக மாறுவதனைக்கேட்ட கள்வர் கூட்டம் இவ்வேளை மெல்ல நடையைக் கட்டிவிட்டது.)

"அன்ப, தூய உள்ளம் படைத்த உன்னைக் கண்டு வருந்துகின்றேன், வா. இஃது களஞ்சிய அறை. நீ ஏதாவது ஒரு பொருளை எடுத்துக்கொண்டு போகலாம்—' இஃதுஜமீந்தார்கூற்று. அவ்வண்ணமே, களஞ்சிய அறையைநன்கு நோட்டம் விட்டபுலவரின்நாட்டம் ஓர் இரும்புப் பெட்டியை நாடியது, ஜமீந்தார் அதனைக் கூடத்தூக்கிதலையில்வைத்து அதற்குரிய சாவியையும் ஒப்படைத்தார்.

புலவர் புதிய சுமையுடன் வீட்டை நோக்கிச் சென்றார். பொழுது புலர்ந்தது. வாழ்வும் புலரும் சமயம் வந்துவிட்டது என்று [illegible] புலவர், மனைவி, மக்கள் சந்நிதியில் உவகையுடன் பெட்டியைத்திறந்தார்.

என்ன ஏமாற்றம் அதற்குள்ளிருந்தது வேலூர்ச் சக்கரை. அப்பாடா! சரி. ஒரு வருடத்திற் தேநீராவது கஷ்டமின்றிக் குடிகக்லாம் என்று மனதில் சமநிலையை வருவித்துக்கொண்டு புலவர் அவர்கள் கொஞ்சம் பருமனை கட்டிகளாக - பத்து பதினைந்து எடுத்து தனது புத்திரபாக்கியங்களிடம்விநியோகித்தார்.

அச்சிறார் வாயில் போட்டதும் காறி உமிழ்ந்து "அப்பா-மண் - மண் - கல் என்று வீசினர். தானும் ஒரு சிறு துண்டை வாயிற் போட்டு பின் உமிழ்ந்த புலவர் சற்றே மௌனமானார்.

சிந்தனை ஓடியது. அதன் விளைவு பின்வரும்பாட்டு.

நாடெலாம் செந்நெல் விளையினும்
நாட்டு நதியெலாம் நவநிதிதரினும்
காடெலாம் பருத்திபட்டாடை காய்க்கினும்
கனகமே மழை பொழியினும்
ஆடலே புரியும் அம்பலவாணன்
அவரவர்க்களித்ததே அல்லால்
வீடெலாம் புகுந்து திருடினும் வருமோ
விதியலால் வேறொன்றுளதோ.

வருத்தான்வருத்தவழியே நடைபெறும் என்பதை இச்செய்யுள்மூலம் உலகிற்கு எடுத்துரைக்கின்றார் புலவர் சிகாமணி.

ஆனால் முயற்சி திருவினையாக்கும் எனவும் முயற்சியுடையவர் இகழ்ச்சியடையார் என்பதும், கடவுளாலாகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக்கூலி தரும் என்பனவும் இங்கு மறக்கற்பாலனவல்ல.

## பெண்களை வேண்டாத பொன் தெய்வம்

கேரள ராஜ்யத்தைச் சேர்ந்தகொல்லத்தில் குள்ள கோட்டம் குளங்கரா ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் விளக்கு விழாவில் பெண்களே கலந்து கொள்ளக்கூடாது. ஆனால் பல்வேறு வயதினரான 3,000 பெண்கள் புதுமையான கவர்ச்சியோடு இந்த ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு ஆயிரக் கணக்கானவர்களைக் கவர்ந்தனர்.

பெதும்பையராகவும், மங்கையராகவும், மடந்தையராகவும், பெண்டிராகஆடை புனைந்திருந்தஅவர்கள் அனைவரும் ஆண்களாவர். மிகக் கச்சிதமாக அவர்கள் பெண்ணுடை பூண்டிருந்தனர்.

"அம்மா", "மகளே" "அக்கா," "தங்காய்," "மாமி" என்று அவர்கள் ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டனர். கால் மைல் நீளத்துக்கு இருவரிசையாக அணிவகுத்துஅவர்கள் சென்றனர். அந்த அமைதியான ஊர்வலத்திற்கு முன்னணி வகுத்து அதில்வந்த ஒவ்வொருவர் கையிலும் சுடர்விடும் விளக்குகள் இருந்தன.

ஆண்டுதோறும் இந்த ஊர்வலம் நடப்பதுண்டு. பாவத்துக்குக்கழுவாய்தேட அல்லது தெய்வம் அளித்த வரத்துக்கு நன்றி செலுத்த அந்த விழா நடைபெறுகிறது. இந்த ஆண்டில் கூட்டம் மிகுதியாக இருந்தது.

தெய்வத்தின் முன்னர் தீபம் ஏற்றிச்செல்லும் பெருமைஇதரகோயில்களில் பெண்களுக்கும் உண்டு. ஆனால் கோட்டம் குளங்கராவிலுள்ள மாதாவோ, இங்கு நடக்கும் விழாவில் பெண்மக்கள் கலந்துகொள்வதை ஏற்பதில்லை!

## நைலான் துணி அணிந்தால் உடல் தோலுக்கு கேடு!

நைலான் துணி அணிந்தால் உடல் தோலுக்குக் கேடு ஏற்படுகிறது என்று நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்என்றும்எனவே தாய்மார்கள் கைத்தறிச் சேலைகளையே அணியவேண்டும் என்றும் இந்திய மேல்சபைத்தலைவர் திரு. எம். ஏ. மாணிக்கவேலு கூறினார்.

ஒரு விழாவுக்குத் தலைமை வகித்து மேல்சபைத் தலைவர் திரு. மாணிக்கவேலு கூறியதாவது:

"மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் கிடைக்கவேண்டும். நம்நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இங்குபோதியஉற்பத்தி இல்லாமல் இறக்குமதி செய்யவேண்டிய நிலை இருக்கிறது.

"உணவுக்கு அடுத்தபடியாக உடை உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். என்னதான் மில்கள் ஏற்பட்டாலும் எல்லோருக்கும் வேலை வாய்ப்பளிக்கக்கைத்தறியை தொடர்ந்து ஆதரிக்கவேண்டும்.

"படித்த பெண்கள் நைலான் போன்ற துணிகளைப் பயன்படுத்துகிறார்கள். வைதீகமான தாய்மார்கள்தான் கைத்தறியைப் பயன்படுத்துகிறார்கள். நைலான் துணி அணிவதால் உடல் தோலுக்குக் கேடு ஏற்படுகிறது. இதைத் தாய்மார்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும்.

"கைத்தறி உடுப்பதால் நம் நாட்டு மக்களுக்கு வாழ்வளித்ததாக மனச்சாந்தி ஏற்படும். தாய்மார்கள் மனது வைத்தால்தான் கைத்தறிக்கு உதவி கிடைக்கும்.

"கைத்தறித் துணியைத் தரமாக நீளம், அகலம் குறையாமல் உற்பத்தி செய்யவேண்டும். நல்லசாயமாகப் பயன்படுத்த வேண்டும்."

## அசுத்தத்தால் உண்டாகும் பயங்கர நோய்

20-ஆண்டுகளுக்குமுன்னர் மிதவெப்ப நிலையுள்ளபகுதிகளில் மட்டும் பரவி வந்த பூஞ்சை நோய் இப்போது உலகம் முழுவதிலும் பரவி இருக்கிறது. மேற்குஜெர்மனியில் சுரங்கங்களிலும் பெரிய தொழிற்சாலைகளிலுமுள்ள 85 வீதம் தொழிலாளர்கள் இந்த நோயினால் அவதியுறுகிறார்கள்.

உலகம் முழுவதிலும் பூஞ்சை நோய் பீடித்தவர்களின் எண்ணிக்கையை துல்லியமாக கணக்கிடுவது என்பது இயலாத காரியம். எனினும் 1·2 முதல் 1·5 கோடிப்பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மிதஉஷ்ணப் பகுதிகளில் கால்களில் அடிக்கடி வெடிப்பு ஏற்படுவதன் மூலம் இந்நோய் உண்டாகிறது. இது தவிர நுரையீரல் பூஞ்சை நோயும் ஏற்படுவதுண்டு. இது மிகவும் பயங்கரமானது. அசுத்தம் காரணமாக இந்த வியாதி ஏற்படுகிறது. எனவே, வீடுகளையும், தரைகளையும் குளியலறைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் என வைத்திய நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். அத்துடன் உடலில் ஏதாவது மாறுதல் தென்பட்டால் உடனே டாக்டரிடம் காட்ட வேண்டியது அவசியம்.

பூஞ்சை நோய் ஒரு தொற்றுநோய். எனவேதான், பூமத்தியரேகைப் பகுதிகளிலிருந்து இந்த நோய் மற்றப்பகுதிகளுக்குப் பரவியிருக்கிறது. இந்நோய் கண்டவர்களுக்கு நரம்புக் கோளாறு, வயிற்றுப் போக்கு, வலிப்பு, களைப்பு ஆகிய கோளாறுகள் ஏற்படுகின்றன. இது தொற்று நோய் என்றாலும், மிதஉஷ்ணப் பகுதிகளில் இந்நோய் அவ்வளவு தீவிரமாகப் பரவுவதில்லை. சர்வதேச உறவுகள் இப்போது நெருக்கமாகிக் கொண்டு வருவதன் விளைவாகவே இந்நோய் எளிதில் பரவுவதாக டாக்டர்கள் கருதுகிறார்கள். பூமத்தியரேகைப் பகுதியிலிருந்து வந்து 10 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் மேற்குஜெர்மனியில் படிக்கிறார்கள். அதே சமயத்தில் 2 இலட்சத்திற்கும் அதிகமான ஜெர்மன் விஞ்ஞானிகளும், பொறி இயல் நிபுணர்களும், தொழில் நுட்ப வல்லுனர்களும் ஆபிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்க நாடுகளில் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் தாய் நாடு திரும்பும்போது பெட்டி படுக்கைகளுடன் நோய்க்கிருமிகளைக்கொணர்கிறார்கள்.

இதனால் பல கம்பெனிகள் தாயகம் திரும்பும் தங்கள் அலுவலர்களைக் கவனமாக வைத்திய சோதனைக்குப்பின்னரே மீண்டும் வேலைபார்க்க அனுமதிக்கிறார்கள். ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் காலரா, பிளேக் போன்ற பயங்கர நோய்கள் எதுவும் "இறக்குமதி யாவதில்லை. கவனமான முன்னெச்சரிக்கைகள் காரணமாக மற்ற நோய்களும் இயன்ற அளவு தடுக்கப்படுகின்றன.

## அரிய சாதனை

முன்பு இரண்டரை ஆண்டு காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட பாம்பன் பாலம் 44 நாட்களில் திரும்ப சீரமைக்கப்பட்டது வரலாற்றில் இடம்பெறக்கூடியதாகும் என்று பாராட்டப்படுகிறது.

இந்தியாவை இராமேஸ்வரம் தீவுடன் இணைக்கும் பாம்பன் பாலம் 50 ஆண்டுகளுக்கு முன்பு அயர்லாந்துபொறியியலர் ஓசென்சாய் என்பவரால் இரண்டரை ஆண்டு காலத்திற்குள் கட்டப்பட்டது. புயலினால் பாலத்திற்கு ஏற்பட்ட சேதத்தினால் 145 "ஸ்பேன்"களில் 125 கடலலையால் அடித்துச் செல்லப்பட்டன. பாலத்திலிருந்து 1000 அடி தூரத்தில் கூட இருப்புத் தூண்கள் தூக்கியெறியப்பட்டிருந்தன. பாலத்தைச் சீரமைக்கும்போது ஏற்பட்ட இரும்புத் தூண்கள் சேவையைமற்ற இரயில்வே பகுதியார் கொடுத்துஒத்துழைத்தனர். தமிழகஅரசும் துரிதமாக உதவிகள் அளித்தது. அவற்றின் உதவிகளாலும் இரயில்வே ஊழியர்களின் திறமையான பணியாலும் மிகக்குறுகிய காலமாகிய 44 நாட்களில் பாலம் சீரமைக்கப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 889

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 3உ (16 5 65)

# சர்வகட்சி மகாநாடு

இலங்கையில் சர்வகட்சிகளின் மகாநாடு ஒன்றை பிரதமர் தாமதமின்றிக் கூட்டித் தேசியப் பிரச்னைகளை ஆராய்ந்து முடிவுகண்டு தேசிய ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டு, யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ் காங்கிரஸ் மகாநாடு ஒரு முக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானத்தில் அடங்கிய யோசனை புதிதன்று. ஐக்கியதேசியக்கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இவற்றின் தலைவர்கள் இதே யோசனையை எதிர்க்கட்சிகளில் இருந்தபோது கூறிவந்திருக்கின்றார்கள். ஆனால் தாங்கள் பதவிக்கு வந்ததும் இந்த யோசனையை எக்காரணம் பற்றியோ அமுலுக்குக் கொண்டுவரவில்லை.

மொழிப்பிரச்னை, இந்திய வம்சாவளியினரின் பிரச்னை, மாவட்டசபை, குடியேற்றப்பிரச்னை முதலிய எல்லாமே அரசியல் அமைப்பைப் பற்றியதாகும். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னதாக பிரிட்டிஷ் அரசாங்கம் இங்கு அனுப்பிவைத்த சோல்பரி கமிஷனின் சிபார்சுகளின் மீது அமைக்கப் பெற்ற அரசியல் திட்டம்தான் இன்னும் அமுலில் இருக்கின்றது. அச்சமயம் தமிழும் ஓர் அரசாங்க மொழியாக இருந்ததெனினும், பின்னர் தமிழ் உரிமை ஒருதலைப்பட்சமாக பறிக்கப்பட்டு, நாட்டின் அமைதிக்கும், சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டது தாங்கள் செய்த இந்த இமாலயத்தவறை, பெரும்பான்மை சமூகப் பிரதிநிதிகள் இதற்கிடையே உணர்ந்திருக்கவேண்டும்.

தமிழ் சமூகத்தின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம் தேவை என்பதை உணர்ந்து, அந்தப் பெரும் தவறை திருத்திக்கொள்ள ஐக்கியதேசியக் கட்சி மட்டுமன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தயாராக இருந்ததென்பது பகிரங்க ரகசியம். அப்பொழுதே சர்வகட்சி மகாநாடு கூட்டியோ, அல்லது அரசியல் நிர்ணய சபையை அமைத்தோ மொழி, இந்திய வம்சாவளியினர் பிரச்னை முதலிய எல்லாவற்றையும் பற்றி விவாதித்து, ஜனநாயக, மனித உரிமைச் சாசனப்படி இவற்றைத்தீர்த்திருப்பின் இலங்கையின் சமீப அரசியல் சரித்திரமே வேறுவிதமாக இருந்திருக்கும்.

அரசியல் விஷயங்களிலே பல கட்சியினரிடையேயும் ஏகமனதான கருத்து ஒற்றுமை ஏற்படுமென்று எதிர்பார்க்கமுடியாதுதான். ஒரே கட்சியிலுள்ளவர்களுக்கிடையிலும் வேற்றுமைகள் இருக்கக்கூடும். என்றாலும், ஜனநாயகமெனப்படும் அரசியல் முறையிலே, மனித அடிப்படை உரிமைகளுக்கு ஏற்பவும், அனுபவம் மிக்க மற்ற ஜனநாயக நாடுகளில் சிறுபான்மை சமூகத்தவரின் பாதுகாப்புக்காக என்ன செய்யப்பட்டுள்ளதென்பதையும் கவனித்து அவ்விதம் இங்கும் செய்தால்தான், தேசிய ஒற்றுமையும் முன்னேற்றமும் ஏற்படுமென்பதில் எந்தக் கட்சிக்கும் வேற்றுமை இருக்கமுடியாது.

சென்ற பொதுத் தேர்தலில் இலங்கைப் பொது மக்கள் அளித்துள்ள முக்கியமான தீர்ப்பின் கருத்தும் இதுதான். புண்பட்ட ஈழத் தமிழ் சமூகத்தினரின் மனதை ஆற்றி, அவர்களது உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றே இலங்கையில் புதிய அரசாங்கம் அமைக்கப்படவேண்டுமென்ற இத்தீர்ப்புக்கிணங்கவே பிரதமர் டட்லி சேனநாயகா இப்போது "தேசிய அரசாங்கத்தை" அமைத்திருக்கின்றார். இந்த அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், இடதுசாரிக்கட்சிகளும் சேராமலிருப்பினும் அக்கட்சிப்பிரதிநிதிகளையும் கொண்ட வட்டமேசை மகாநாடு அல்லது அரசியல் நிர்ணய சபையை இனி தாமதமின்றிக்கூட்டி, இலங்கையிலுள்ள சோல்பரி அரசியல் திட்டத்தை அடியோடு புனராலோசனை செய்து, இங்குள்ள அரசியல் நோய்க்கு தக்க பரிகாரம் காணவேண்டும். இம்முயற்சியில், எதிர்க்கட்சியினரும் ஒத்துழைக்க மறுக்கமுடியாது. எவ்வளவு சீக்கிரத்தில் இதற்கான ஒழுங்குகளை பிரதமர் டட்லி செய்கிறாரோ அவ்வளவும் நாட்டுக்கு மட்டுமன்றி இப்போதுள்ள அரசாங்கத்துக்கும் நன்மையாகும்.

# யார் அறிவார்?

## (நெஞ்சொடு கிளத்தல்)

"மனத்தினால் மனிதனாகிறான் என்று வடமொழியில் ஒரு செய்யுள் உண்டு. வாசனை ஏறி அடுக்கி நிற்க, அமைந்த மனந்தான் மனிதனுடைய இன்ப துன்பங்களுக்குக் காரணமாகிறது. மனத்தின் வசப்பட்டு வாழ்வாருக்கு நிலையான முயற்சியும் நிலையான வாழ்க்கையும் இருப்பதில்லை. மனம்போன போக்கின்படியே போகிறவர்கள் மேலும் மேலும் பிறவிப்பிணிக்கு ஆளாவர்.

ஆனால் அந்த மனத்தைக் கொண்டே நன்னெறியிலே சென்று நற்பயன் கொள்ளலாம். மனத்தின் வசப்பட்டு நாம் இயங்காமல் நம்வசப்பட்டு மனம் இயங்கினால் நன்மை உண்டாகும். அதற்கு நெடுங்காலப் பழக்கம் வேண்டும். அடியார்களின் கூட்டத்திலே பழகுவதனால் மனத்தின் இயக்கம் நம்வசப்பட்டு வரும். மனத்தை அடக்கிய பின்பு அதனை அழித்தால் இன்பம் உண்டாகும். மனம் அழிவதற்கு அந்த மனத்தையே துணையாகக்கொள்ள வேண்டும்.

ஞானசம்பந்தப் பெருமான் மனத்தைப் பார்த்துப் பேசுகிறார்: நாம் பேசவேண்டியதை அவர் பேசிக் காட்டுகிறார். சொன்னபடி கேளாத குழந்தையைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதுபோல நெஞ்சத்தைத் தட்டிக்கொடுக்கிறார்.

''நெஞ்சே, நீ நல்ல நெஞ்சம் அல்லவா? உன்னால் தானே எனக்கு இன்பம் உண்டாக வேண்டும்? எங்கும் பரந்து அளவு கடந்து நிற்கும் பரம்பொருளை உனக்குள்ளே அடக்கிக் கொள்ளும் ஆற்றல் உனக்கு இருக்கிறதே! நீ நினைத்தால் நல்ல கதியை அடைவிக்கும் சக்தி உன்பால் உண்டு. நீ நல்ல துணையாக இருந்தால் நான் உய்ந்துவிடுவேனே! என் நல்லநெஞ்சமே' என்கிறார். அதற்கு நெஞ்சு:

''நான் இப்போது என்ன செய்யவேண்டும்? சொன்னபடி செய்யத்தான் காத்திருக்கிறேனே' என்று விடையளிக்கிறது.

ஞானசம்பந்தர்: நெஞ்சே நீ தினந்தோறும் நினைப்பாயாக.

நெஞ்சு: என்னுடைய தொழிலே அதுதானே? புதியதாக இப்போ செய்ய வேண்டியது அல்லவே!

ஞான: நினைப்பே உருவாக இருக்கிறாயென்பதை நான் அறிய மாட்டேனா? ஆனால் கண்ட கண்ட பொருளையெல்லாம் நினைப்பதை நான் சொல்லவரவில்லை. நான் சொல்வதை நினைக்கவேண்டும்.

நெஞ்சு: எல்லாப் பொருளையும் நினைத்துக் கொண்டு தானே இருக்கிறேன். புதியதாக நினைப்பதற்கு என்ன இருக்கிறது?

ஞான: புதிய பொருள் அன்று; பழைய பொருள் தான். நீ எப்போதாவது இந்தப்பொருளை நினைக்கிறாய். அதுபோதாது. நாள்தோறும் நினைக்கவேண்டும். சாய்க்காட்டில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நினைக்கவேண்டும்.

நெஞ்சு: எதற்காக?

ஞான: நீ எப்போதாவது துன்பம் வந்தால் நம்கவலையைப் போக்குவார் யாரென்று சிந்தித்துத் தேடுகிறாயே, எல்லாத் துன்பங்களிலும் பெரிய துன்பம் மரணம். அதனைப்போக்கி, மீண்டும் பிறவாமல் காத்து ஆட்கொள்ளும் பெருமான் அவன். ஆகையால் அவனை நினைக்கவேண்டும்.

இப்பொழுது நெஞ்சு கூறும்: மரணம் வரும்போதல்லவா அந்தத் துன்பத்தினின்றும் மீள் அவனை நினைக்கவேண்டும்? இப்பொழுதே அதுபற்றிய கவலை எதற்கு?

ஞான: மரணம் வரும்போது நினைக்கவேண்டும் என்பதையாவது உறுதியாக நம்புகிறாயா?

நெஞ்சு: ஆம்; இறைவன் தனக்குவமை இல்லாதவன். அவன் தான் யாராலும் தீர்க்க இயலாத மரணக் கவலையைப் போக்குவான் என்று தெரிந்துகொண்டேன். ஆனால் அதற்காக இப்போதே அவனை நினைத்து அவனுக்கு வேலை கொடுப்பானேன்?

ஞான: மரணம் வரும்போது அவனை அழைக்கலாம் என்பது நல்ல நினைவுதான், எப்போது அழைத்தாலும் வந்து அருள் செய்யும் கருணைக்கடல் அவன், எனக்கு இப்போது செவ்வி இல்லை என்று சொல்லமாட்டான். வேறு ஒருவனுக்கு உதவிசெய்யவேண்டும். ஆதலின் உன்னிடம் வர இயலாது என்றும் சொல்லமாட்டான். ஒரே சமயத்தில் உலகில் உள்ள அனைவரும் அழைத்தாலும் உடனே அத்தனைபேருக்கும் அருள்செய்வான். அவன் 'சர்வாந்தர்யாமி ஆதலின் ஒரே காலத்தில் பலருக்கு உதவும் ஆற்றல் உடையான்.

— சி. குருபரலிங்கம் —

நெஞ்சு: ஆதலின், துன்பம் வரும்போது அவனை அழைத்தால் போதுமே!

ஞான: அது சரிதான். ஆனால் மரணம் இன்ன நேரத்தில் தான் வரும் என்பது திட்டமாக அறிவாயா? இவ்வளவு காலம் வாழ்வோம், இன்ன காலத்தில் நமக்கு மரணம் நேரும் என்று யாராவது தெரிந்து கொண்டிருக்கிறார்களா? மரணம் ஏற்படும் நேரம் இன்னதுதான் என்று தெரிந்துகொள்ளும் ஆற்றல் இருந்தால் அது வரும் போது நினைக்கலாம் என்று இருக்கலாம். அதுதான் யாருக்கும் தெரியாதே!

நெஞ்சு: ஆம், யாரும் அதை அறியமாட்டார்கள்.

ஞான: யமன் தான் வரும் நேரம் இன்னதென்று முன்னே அறிவிப்பதில்லை. மனிதராகப் பிறந்தாருக்கு இன்ன பிராயத்தில் மரணம் நேரும் என்ற வரையறையும் இல்லை. மனிதருக்கு வயசு நூறு என்று சொல்வது, எல்லோரும் அத்தனை காலம் வாழ்வார் என்று நினைந்து சொல்வது அல்ல. மனிதன் அதிகநாள் வாழ்ந்தால் நூறு ஆண்டுகள் வரையில் வாழலாம் என்ற கருத்தோடுதான் அந்தக் கணக்கு உண்டாயிருக்க வேண்டும். ஒவ்வொருமனிதனும் தனித்தனியான ஆயுட்கணக்கை உடையவனாக இருக்கிறான். அறுபது ஆண்டிலே சிலர் இறக்கிறார்கள். அதைக் கொண்டு அவருடை மக்கள் அறுபதாவது ஆண்டிலே இறந்துபோவார்கள் என்று சொல்வதற்கில்லை. எண்பது ஆண்டு வாழ்ந்தவருடைய பிள்ளை எட்டுஆண்டிலே இறப்பதும் உண்டு. முப்பது ஆண்டு வாழ்ந்தவருடைய மகன் எண்பது ஆண்டு வாழ்ந்ததும் உண்டு. எந்தச் சார்பைக் கொண்டும் சாவுநாளும் வாழ்நாளும் இன்னவை என்று அறிதல் அரிது. அறிந்தார் இலர். இந்த உண்மையை நினைத்துப் பார்க்கும்போது, மரணக் கவலையை மாற்ற வேண்டுமானால் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருக்கமுடியாது.

நெஞ்சு: அப்படியானால் என்ன செய்வது?

ஞான: அதைத்தானே சொல்லவந்தேன், கேள். இறக்கும் காலம் இன்னதென்று யாருக்கும் தெரியாதென்பதை நீ அறிந்து கொண்டாய் அல்லவா? ஒருகால் அதனை அறியும் ஆற்றல் யாருக்கேனும் இருந்தாலும் அவனும் மரணக் கவலையை மாற்றமுடியாது.

நெஞ்சு: ஏன்?

ஞான: இறைவனை மரண சமயத்தில் நினைக்கவேண்டுமானால் அதற்கு நெடுங் காலப் பயிற்சி வேண்டும். உழுங்காலத்திலெல்லாம் ஊர்சுற்றிவிட்டு அறுக்கும் காலத்தில் அரிவாள் எடுத்து வந்தால் அவனுக்கு என்ன கிடைக்கும்? பல காலமாக இறைவனைத் தியானித்துத் தியானித்துப்பழகினால்தான் எந்தச்சமயத்திலும் அவன் நினைவு வரும்.

நெஞ்சு: தாங்கள் என்னதான் வழி சொல்கிறீர்கள்?

ஞான: சாவுநாளும் வாழ்நாளும் அறியாமல் இருக்கிறோம். மரணம் வருவது உறுதி. அது எந்தச் சமயத்திலும் வரக்கூடும். அதற்கு ஏற்ற பாதுகாப்பை எப்போதுமே உடையவர்களாக இருந்தால் அதைப்பற்றிய கவலையே வேண்டுவதில்லை. உணவைச் சேமித்து வைத்திருப்பவனுக்கு பசி வருமே என்ற கவலை இல்லை. எப்போது பசித்தாலும் உண்டு பசியாறலாம். மரணக் கவலையை நீக்கும் இறைவனை எப்போதுமே நினைத்து வழிபட்டால்,, மரணம் எப்போது வந்தாலும் அதற்கு அஞ்சவேண்டியதில்லை. ஆதலின் நெஞ்சமே, நீ நாளும் சாய்க்காட்டு எம்பெருமானை நினைகண்டாய்.

நீ நாளும் நன் நெஞ்சே
நினை கண்டாய்; யார்
அறிவார்
சாநாளும் வாழ்நாளும்..?

நெஞ்சு: நினைத்தால் போதுமா?

ஞான: நினைப்பு எழுந்தால் அது செயலாக விளையும். எந்தக் காரியம் செய்தாலும் மனத்தோடு செய்தால் அதற்குப் பலன் அதிகம். மனத்தில் ஆர்வத்தோடு செய்யும் அறமே அறம் என்பதை நீ கேட்டதில்லையா? உன்னிடத்திலே நினைப்பு எழுந்தால் இறைவனுடைய உடம்பும் வாக்கும் தொழிற்படும். நீ போகிற வழியே அவை தொடர்ந்து வரும், இறைவனுடைய நினைவு உனக்கு வந்துவிட்டால் அந்த நினைவு பல பல உருவத்தைக் கொள்ளும். இறைவனை மலரெடுத்துப் பூசிக்க வேண்டுமென்று நினைப்பாய். கையாலே சில மலரைப்பறித்துப் பூசிக்கும் அளவிலே உன்விருப்பம் நில்லாது சுமைசுமையாக மலரைச் சுமந்து சென்று பூசிக்கவேண்டும் எனத் தோன்றும். உலக வாழ்விலே பொருளானாலும் போகமானாலும் அளவின்றி விரும்புவது உன் இயல்பாயிற்றே! இறைவனிடம் மெய்யான அன்பு தலைப்பட்டால் அவன் திறத்துச்செய்யும் செயலுக்கு அளவு ஏது? ஆதலின் மலரைத் தினந்தோறும் தலையாலே சுமந்து சென்று பூசிக்க ஆசைதோன்றும். அப்படியே செய்யவுங்கூடும். இறைவன் உருவமும் நாமமும் இல்லாதவன் ஆனாலும் ஆருயிர்களின் அன்பு படர்வதற்குப் பற்றுக்கோடு வேண்டுமென்று உருவங்

( 8 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது ஜனம் கேள்வி

## உலகமேடை

டி. எம். எம்

'சார்' என்றகுரல் கேட்டது பழகிய குரலாய் இருந்தது. ஆனல் அந்தக் குரலில் இவ்வளவு மரியாதை இருக்காதே என அதிசயத்துடன் நிமிர்ந்தேன். அதிசயம் தான். ஸ்ரீமான் பொதுஜனம் உள்ளே வந்துகொண்டிருந்தார். வழக்கத்துக்கு மாருக அவர் மரியாதையுடன் அழைத்ததுதான் எனது ஆச்சரியத்திற்குக் காரணம்.

''நன்றி" என்றேன்.

''என்ன ஒய் நன்றி கூறுகிறீர். வந்தவுடன் போகச் சொல்லுகிறீரா" என்று திடுதிப்பென்று பாய்ந்தார். அவர் சுருதி எனக்குத் தெரிந்ததுதான்.

''ஐயையோ. அப்படிச் சொல்வேனு. நீங்கள் எவ்வளவு பெரியமனிதர். 'இவனை'த் தேடிவந்ததே பெரிய காரியமாச்சே என்றேன்.

''பின் ஏன் நன்றிகூறினீர்" என்ருர், விடாப்பிடியாக. 'சார்' என்று மரியாதையுடன் அழைத்தீர்களே. அதற்குத்தான் அப்படிச்சொன்னேன்" என்று கூறவும், ''அப்படி அழைக்கப்பட உமக்குத் தகுதி இல்லை என்று நீரே ஒப்புக்கொண்டுவிட்டீர், இல்லையா என்றுமடக்கினுர்.

இந்தப் பொதுஜனத்திடம் பல நாள் பழகியிருக்கிறேன். எனவே கேலியும், கிண்டலும், குத்தலும், அன்பும் அவருக்குண்டு என்பது எனக்கு நன்ருகத்தெரியும்.

''என்ன ஐயா விழிக்கிறீர்" என்ருர்.

''விழிக்கவில்லை. யோசிக்கிறேன்" என்றேன்.

''உலகைப் பிடிக்கப்போகிறீரோ. அந்தவேலையை எத்தனையோபேர்செய்து தோற்றுவிட்டார்கள். இப்போது எனது கேள்விக்குப் பதில் சொல்லும் என்று மட்டம் தட்டினுர்.

''கேளுங்கள்" என்றேன்.

'சரி' கேட்கட்டுமா? உமது பத்திரிகையில் அடிக்கடி ''வியட்காங்கியர், என்று எழுதுகிறீரே' அவர்கள்யார்? அவர்கள் மனிதர்களா அல்லது மிருகங்களா?" என்று கேட்டார்.

'ஏன் சுவாமி இந்தச் சந்தேகம்' என்று அடக்கமாகக்கேட்டேன்.

''ஆமாம், அவர்கள் மனிதர்களல்லாவிட்டால் குரங்குகளாகத்தான் இருப்பார்கள். 'கொரில்லாக்கள்' என்றும்கூறுகிருர்களே' என்ருர்.

"ஐயா, இது சாதாரண சின்னக்கேள்விதானே. வியட்காங்கியர் என்பவர்கள் மனிதர்கள்தான். மறைந்திருந்து தாக்கும் போர் முறைக்குகொரில்லாப்போர் உத்தி என்பார்கள். சிறு தொகையாக இருந்தாலும் மறைந்திருந்து தாக்குதல் நடத்துவது, நாசவேலைசெய்வது போன்ற உத்திகளால் பெரும்படையையும் கதிகலங்கச்செய்யலாம். இதற்கு விசேஷ பயிற்சி தேவை" என்றேன்.

"அதுசரி" இந்த வியட்காங்கியர் உள்ளூரைச்சேர்ந்தவர்களா அல்லது வடவியட்னமிலிருந்து ஊடுருவல் செய்தவர்களா என்ருர்.

''ஊடுருவல் செய்தவர்கள்தான்'' என்றேன்.

''நீஅமெரிக்காவின் கட்சி. அதனுல் தான் இப்படிச் சொல்கிருய்'' என்ருர் எகத்தாளமாக.

"ஐயோ நான் சொல்லவில்லையே. சர்வதேசக் கருத்தையல்லவா சொல்கிறேன் என்றேன்.

''எந்த சர்வதேசக் கருத்து" என்ருர் இடைமறித்து.

''அதுதான் சர்வதேசக் கண்காணிப்புக் கமிஷனின் அறிக்கையென்றேன்."

''அதில் யாரையா இருக்கிருர்கள்? எப்போது சொன்ஞர்கள்" என்ருர்.

''இந்தியா, போலந்து, கனடா மூன்று நாடுகளும் இருக்கின்றன. ஆரம்பத்திலேயே இதுபற்றி ஐ. நா.வுக்கு அவர்கள் அறிக்கை சமர்ப்பித்திருக்கிருர்கள். ஆனல் போலந்து இதில் ஒப்பமிடவில்லை என்றேன்.

''அப்படியானுல்அது ஏகாதிபத்திய கருத்து. போலந்து இதை ஏற்கவில்லையே''என்ருர்.

"வட வியட்னும் ஒரு கம்யூனிஸ்ட்நாடு. எனவே மற்ருேர் கம்யூனிஸ்ட் நாடான போலந்து எப்படி அதைப் பற்றிப்புகார் கூறமுடியும்" என்றேன்.

''உம்முடைய வாதம்சரி என்றே வைத்துக்கொள்வோம். அவர்கள் எப்படி தென்வியட்னமுக்குள் வருகிருர்கள்" என்று கேட்டார்.

''வடக்கு-தெற்கு வியட்னமை 17-வது அட்சரேகை பிரிக்கிறது. இந்த வழியாக ஊடுருவுவதற்கான பாதை இல்லை. மேற்குப்பக்கமாக லாவோசுக்குள் புகுந்து அதன் எல்லை வழியாக நீண்டதூரம் தெற்கேவந்து பின் மீண்டும் கிழக்கே தென்வியட்னமில்பிரவேசிக்கிருர்கள்.

''கடல்வழியாகவும் அவர்களில் சிலர் வருகிருர்கள். ராணுவ சப்ளைகளும் அவர்களுக்கு இந்த வழியாக வருவதுண்டு. பரந்த அளவில் கொரில்லாப்போர் முறையிலீடுபட்டபோதிலும், இப்போது முறையான பட்டாளமாகவும் அவர்கள்போரிடுகிருர்கள்.''

''இப்படி வந்தவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்" என்று கேட்டார் பொது ஜனம், ஆவலுடன்.

''சுமார் 35000 பேர் என மதிப்பிடப்படுகிருர்கள். இதுதவிர சுமார் 80,000 பகுதி நேர கொரில்லாக்களும் இருக்கிருர்கள். வடவியட்னமிலிருந்து வந்தவர்கள் தென் வியட்னமிலுள்ளவர்களையும் தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டிருக்கிருர்கள். அனைவரும் வடவியட்னம் தலைநகர் ஹானேயிலிருந்தே நேரடியாகக் கட்டுப்படுத்தப்படுகிருர்கள். மிகத்திறமையான, விரிவான ஸ்தாபனம் இதில் செயல்பட்டு வருகிறது" என்று விளக்கினேன்.

''ராணுவ உத்தியைப் பொறுத்தவரை 5,000 கொரில்லாக்கள் 50,000 துருப்புக்களைச் சமாளிக்கும் வகையில் செயல்படமுடியும். அதாவது 10 துருப்புக்களுக்கு ஒரு கொரில்லா சமம்' என்றும் கூறினேன்.

''விளங்குகிறது. ஓரளவு விளங்குகிறது. அமெரிக்காவும், தென்வியட்னமும் இத்தனை தாக்குதல் நடத்தியும் அவர்கள் நின்றுபிடிப்பதன் ரகசியம் இப்போது விளங்குகிறது என்ருர் பொதுஜனம்.

''ஐயா, ஒரு விஷயத்தைக் கேளுங்கள். தென்வியட்னமில் சட்ட பூர்வமான அரசாங்கத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இப்போது தென்வியட்னமியர் ஈடுபடவில்லை. மற்ருேர் அந்நிய நாடு, அதாவது வடவியட்னம், சீனவின் ஆதரவுடன் தென்வியட்னமுக்குள் சட்டவிரோதமான முறையில் செயலாற்றிவருகிறது. வியட்காங் கிளர்ச்சி சிலர் கூறுவதுபோல் உள்நாட்டுக் கிளர்ச்சி அல்ல. அந்நியத் தலையீடுதான் இது' என்றும் கூறினேன்.

''ஆகக்கூடி இப்போது இரண்டு அந்நிய நாடுகள் தென்வியட்னமில் புகுந்திருக்கின்றன. ஒன்று வடவியட்னம். மற்றொன்று அமெரிக்கா. இல்லையா' என்ருர்.

''ஆமாம் என்றேன்.

''தெற்கு, வடக்குவியட்னமுக்கு இடையிலுள்ள சர்வதேச எல்லையில் ஆசிய-ஆபிரிக்க பொலிஸ்படையை நிறுத்தலாம் என ராதாகிருஷ்ணன் ஒரு யோசனை கூறியிருக்கிருரே' என்ருர் பொதுஜனம்.

''ஆமாம். ஆனல் நடைமுறையில் அது எந்த விதத்தில் சாத்தியமானது என்பதை நிபுணர்களே ஆராய வேண்டும். ஏனெனில் ஊடுருவல்காரர்கள் வடக்கிலிருந்து நேரடியாகத் தெற்கு நோக்கி வருவதில்லை. லாவோஸ் வழியாகஅவர்கள் வருகிருர்கள். இத்தகைய பொலிஸ்படையின் கண்காணிப்பிலிருந்து தப்பிவர அவர்களுக்கு வழி உண்டு. அதேசமயம் அரசியல்ரீதியான தீர்வும் இப்போது சிக்கலாக இருக்கிறது. சமரசப்பேச்சு நடைபெறுமானுல் அதில் யார் யார் பங்கு பற்றவேண்டும் என்ற அடிப்படையிலேயே கருத்து வேற்றுமையிருக்கிறது. எல்லா அம்சமும் அங்கு நவக்கிரகத்தைப்போல் இருக்கிறது' என்றேன்.

பொது ஜனம் மடியைத் தடவினுர். பொடிமட்டையைக் காணேம். எனவே மூளையின் சுறுசுறுப்பு அவருக்குக் குறைய ஆரம்பித்தது. ஏமாற்றத்துடன், ''சுருட்டு ஒன்று தாரும்' என்ருர்.

வாங்கிப்பற்றவைத்தார். எரிச்சலுடன், ''என்ன சுருட்டு ஐயா. வியட்காங்கியரைப் போல் உள்ளே ஊடுருவிக்கொண்டு நெருப்பு வாய்க்கு வந்துவிட்டது" என்று கூறிவிட்டு அதை வெளியே வீசினுர். அதன்பின் ''வருகிறேன்" என்று நடையைக் கட்டினுர். தூரத்தில் அவர் மறையும் வரை பார்த்துக்கொண்டே இருந்தேன். ஏதோ [illegible] போது என் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

## 229 வைரங்கள் பதித்த அதிசயச் சிலை

உலகிலேயே மிகப்பழமையான அணிகலன் பொருட்காட்சி மேற்கு ஜெர்மனியிலுள்ள மூனிச் நகரில் 400 ஆண்டுகளாக இயங்கிவருகிறது. இங்கு மிகவும் விலை உயர்ந்த பண்டைக்காலத் தங்க, வைர, வெள்ளி ஆபரணங்களும் நவரத்தின அணிகலன்களும் விலைமதிப்பற்ற சிலைகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. குதிரையில் சவாரி செய்யும் புனிதர் ஜார்ஜின்சிலை ஒன்று இங்கு இருக்கிறது. இது 16 ம் நூற்ருண்டைச் சேர்ந்தது. இதில் 2,291 வைரங்களும், 406 சிவப்புக் கற்களும், 209 பவளங்களும் பதிக்கப்பட்டுள்ளன. புனிதரின் உருவமும் குதிரையின் காலடியில் மிதிபட்டுக்கிடக்கும் முதலையும் தங்கத்திலானவை. இங்குள்ள அதிசயப் பொருள்களில் இதுதான் விலை உயர்ந்தது.

## மடங்கும் சைக்கிள்!

காரின்டிக்கியில் அடங்கும்படி மடக்கி வைத்துக் கொள்ளக்கூடிய புதுவகைச் சைக்கிளை மேற்குஜெர்மனியில் தயாரித்திருக்கிருர்கள். ஒரு ஆள் செல்லக்கூடிய மடங்கும் சைக்கிளை முன்பே தயாரித்திருக்கிருர்கள். இந்தப் புதிய சைக்கிளில் இருவர் செல்லலாம். காரில் செல்பவர்களுக்கு இது மிகவும் பயன்படுகிறது. கார் செல்லமுடியாத இடங்களில் காரை நிறுத்திவிட்டு காரோட்டியும் அவருடன் வருபவரும் இந்தச் சைக்கிளில் ஏறிச்செல்லலாம். தேவையில்லாதபோது இதை மடக்கி டிக்கியில் போட்டுவிடலாம்.

([illegible]ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் நாமங்களையும் ஏற்றுக்கொண்டிருக்கின்ருன். அவனுடைய திவ்ய மூர்த்தங்களைப் பூசித்து வழிபடுவது அன்பர்களுக்கு இனிக்கும் செயல். ஆதலின் மனத்திலே அன்பு முறுக முறுக இறைவனுடைய மங்கலத் திருவடிவங்களைப் பூசித்து வழிபடும் செயல் மிகுதியாகும்.

நெஞ்சு: பூ நாளும் தலை சுமக்கும்படி நினைக்கிறேன். பின்பு?

ஞான: இறைவனுடைய கருணைத்திருவிளையாடல்கள் பல. அவனுடைய குணநலங்கள் பல. அவனைப் புகழும் அன்பர்கள் இவற்றையெல்லாம் எடுத்துச்சொல்லிப் பாராட்டுவார்கள். அவனுடைய திருநாமங்களை வாயாரச் சொல்லுவார்கள். அவற்றையெல்லாம் கேட்கும்போது காதுக்கு இனிக்கும். தன் காதலனுடைய செயல்களையும் நாமத்தையும் கேட்கும்போது காதலிக்குஇனிப்பதுபோலஅவை இனிக்கும். எங்கே, யார் இறைவன் புகழைப் பேசுகிருர்கள். இறைவன் நாமபஜனை செய்கிருர்கள் என்று தேடிப்போய்க் கேட்கும்படியான ஆர்வம் உண்டாகும். அன்பு இப்படியெல்லாம் விளையும். இறைவனுடைய புகழையும் நாமத்தையும் செவிகேட்பதோடு நின்றுவிடமுடியுமா? நாவும் நவில வேண்டும் என்ற ஆவல் எழும். இடைவிடாது நவின்று ஏத்த வேண்டும் என்ற ஆர்வம் மீதூரும். தலை பூவைச்சுமக்க, காது புகழையும் நாமத்தையும் கேட்க, நா நாள்தோறும் அந்தப் புகழையும் நாமத்தையும் நவின்று ஏத்தி இவ்வாறு உரமேறிவரும் அன்பினுலே நல்ல வினையைப் பெறலாம்; புண்ணியம் உண்டாகும். இந்தப் புண்ணியம் சொர்க்கபோகத்தைத்தருவதோடு நிற்பதன்று. சிவபோகத்தைத் தரும் புண்ணியம் இது, எல்லாவற்றிற்கும் மூலம், நல்ல நெஞ்சமாகிய நீ இறைவனை அன்போடு நினைப்பது தான். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களில் தலைமை பெறும் கரணம் நீ தானே? நீ இயங்கும் வழியிலே மற்ற இரண்டும் இயங்கும். தலையும், செவியும் இயங்க, மற்ற உறுப்புக்களும் அன்புச் செயலைச் செய்யும். நாவும் இறைவன் பால் இயங்கும். இப்படி மூன்று கரணங்களும் அன்புமயமாக இயங்கினுல் நிச்சயமாக நல்ல புண்ணியத்தைப் பெறலாம்.

## வந்த வழி ஏது கண்ணே?

— "கீதா" —

தேன் நிலவோ
தென்காற்ருே
தித்திக்கும்
செந்தமிழோ?
தாய்மைப் பெரும்
தவமோ
தந்தை மனத்
துடிதுடிப்போ
வந்த வழி எது
கண்ணே அதை
நீ வாய் திறந்து
சொல்லாயோ?

○

கண்மணியின்
ஒளிக்கதிரோ
கவின் மலரின்
நறுமணமோ
மென் இசையின்
ஒலி வழியோ
மெல்லியலார்
அடிச்சுவடோ
வந்த வழி எது
கண்ணே, அதை நீ
வாயமுதாய்ச்
சொல்லாயோ?

○

வந்தவழி
நீள்வெளியோ
நெடுங்கனவோ
வான்பிறையும்
வளர்மதியும்
பின்னல்
தொடர்ந்தனவோ
வானவில்லினெழில்
வண்ணம்
முத்தமிட்டுச்
சென்றதோ
தாரகைச் சுடர் ஒன்று
கண்ணில் ஒழுகியதோ,
உந்தன்
நீலோற்பல விழியில்
நீலாம்பரி
சொக்கியதோ
மாதுளை பூத்ததோ
மென்காந்தள்
சிரித்ததோ: கஞ்ச
மலர்த்தாள்
உமையவள் நின்
பாதமலர்
தொட்டாளோ,
நீ தவழ்ந்தோடி
வந்தாயோ, பறந்
தோடி வந்தாயோ?

○

வந்தவழி எந்தவழி
தனி வழியோ
அருள் வழியோ
அந்தவழி உனக்
குத்தான் சொந்தமோ
சுதந்திரமோ, நெடு
வழியோ வெகு
நூறு கல் தொலைவோ
வழி நீளம்
கல் முள்ளோ
அங்கெல்லாம்
மேனகை குதித்
தாளோ, அவள் கை
மெட்டி குலுங்கிற்ருே;
மேகலை கொஞ்சியதோ,
வேனில் குமரி அவள்
வெண்சாமரை
இட்டாளோ? வள்ளி
யம்மை கூவினளோ
அவள் கிள்ளைமொழி
கேட்டனையோ
வந்த வழி எது
கண்ணே, அதை நீ
வாயாரச்
சொல்லாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக்கதை

# பாட்டரி தந்த வட்டி

— பொ. சண்முகநாதன் —

நான் அன்று கடையில் வாங்கிவந்த பாட்டரிப் பார்சலைப் பக்குவமாகப் பிரித்து பாட்டரிகளை இலேசாகத் துடைத்து, அவைகளை மெதுவாக லைட்டுக்குள் நுழைத்து மூடினார் பெரியவர்.

வெளிச்சம் வருகிறதா என்று லைட்டின் விசையை அமுக்கிப் பார்த்தார்; அவரது முகம் மலர்ந்தது! உடனே நிறுத்திவிட்டு வெளிச்சத்தின் நடுவே விழுந்த கரும்புள்ளியைப் போக்குவதற்காக மூடியைச் சிறிது திருப்பினார். மீண்டும் விசையை அமுக்கினார்; அவரது முகம் பிரகாசித்தது. உடனே வெளிச்சத்தை நிறுத்திவிட்டார்.

பாட்டரியின் விசையை அமுக்கும்போதெல்லாம் பெரியவருக்குத் தனது தொண்டையை அமுக்குவது போல் இருந்தது.

பிள்ளைகள் புடைசூழ கணவரது செய்கையைப்பார்த்துக்கொண்டிருந்த பெரியவரின் மனைவி "லைட் இல்லாமல் எவ்வளவு காலம் வாழுகிறது? இன்றைக்கேனும் லைட்டுக்குப் பாட்டரி போட மனம் வந்ததே! அதைப்பாராட்டவே வேண்டும்" என்றாள்.

பெரியவருக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. "பாட்டரி விற்கிற விலை உனக்கு எங்கே தெரியப் போகிறது? பாட்டரி யானை விலை குதிரை விலை விற்கிற இந்தக் காலத்தில் லைட்டைப் பாவிக்கிறதில் கவனமும் கண்டிப்பும் அவசியம் தேவைப்படுகிறது என்றவர் தொண்டையைக்கனைத்தவாறு நிமிர்ந்துஉட்கார்ந்து மனைவி மக்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினார்.

"லைட் எந்த நேரமும் இந்த மேசையிலேயே இருக்கவேண்டும். மேசையை விட்டு அங்கிங்கு நகர்ந்ததோ நீங்களெல்லாரும் தொலைந்தீர்கள். கிணற்றடிக்குத்தண்ணீர் மொள்ளப் போகவேண்டுமானாலோ, தெருப்பக்கம் படலை பூட்டப் போவதானாலோ, அடுத்த வீட்டுக்குப்போவதானாலோகூட லைட்டை எடுக்கக்கூடாது. அதற்கு

சிறுவர் பூங்கா

எல்லாம் அரிக்கன் விளக்கு இருக்கவே இருக்கிறது. எலி சரசரத்தால், பூனை தொந்தரவுசெய்தால் தீக்குச்சியை கிழித்துப்பார்க்கவேண்டுமே தவிர லைட்டைப் பிடித்துப் பார்க்கக்கூடாது..."

"அப்படியானால் பாட்டரியை ஏன்தான் வாங்கிவந்தீர்களோ" என்று அலுத்துக் கொண்டாடார்கள் பெரியவரின் பிள்ளைகள்.

பெரியவர் தொடர்ந்தார்: "லைட்டை மிகமிக அவசியமானால் மட்டுமே சிறிது நேரம் தட்டிப்பார்க்கலாம். கள்ளர் யாராவது வந்தால், உண்மையிலேயே அவர் கள்ளர் என்று நிச்சயமானால் ஒருக்கால் தட்டிப்பார்க்கலாம். பாம்பு, புலிநகச் சிலந்தியாயிருக்குமோ என்று நினைத்து பல்லிக்காகத் தட்டிப்பார்ப்பதல்ல..

பெரியவரின் மனைவி மக்கள் இந்தப்பழம் புளிக்கும் என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள்.

பெரியவர் விட்டாரா தொடர்ந்தார்:- "இந்தப் பாட்டரி தொடர்ந்து பன்னிரண்டு மணித்தியாலங்கள் பாவிக்கக்கூடியதாம். நான் முன்பு கூறியபடி பாவித்துவந்தால், குறைந்தது ஓர் ஆண்டுக்கேனும் பாவிக்கமுடியும். பாட்டரி விற்கிற விலை உங்களுக்கு எங்கே தெரியப்போகிறது?"

பெரியவர் மிகவும் கண்டிப்பானவர். அவரது சொல்லைமீறி நடப்பவர்கள் அந்தவீட்டில்யாருமேஇல்லை

ஒரு நாள் "கூட்டத்துக்குப் போகவேண்டும்; லைட்டை எடு என்று பெரியவர் மனைவியை அவசரப்படுத்தினார்.

மனைவி ஐந்து மாதங்களாக ஒருவர் கையும்படாது மேசையில் தவம் கிடந்த லைட்டை எடுத்து வந்து கொடுத்தாள்.

லைட்டின் விசையை அமுக்கிப்பார்த்தார்; பெரியவரின் முகம் கறுத்தது. விளக்கை ஒருமுறை குலுக்கிவிட்டு அமுக்கிப் பார்த்தார். ஊகூம்...

லைட்டின் மூடியைத்திருகினார். 'டப்' என்ற சப்தத்துடன் லைட் இரண்டாகியது. அதிலிருந்து ஒருவித வெள்ளைத்திராவகம் வடிந்தது. ஒடும் புளியம் பழமும் போல் இருக்கவேண்டிய லைட்டும்பாட்டரியும் ஒன்றை ஒன்று பிரிக்கமுடியாதவாறு இரண்டறக்கலந்து உக்கிப் போயிருந்தது.

## ஈழம் எங்கள் நாடு

— வாணி —

○ இந்து சமுத்திரத்தின் முத்து - எங்கள்
இன்பத் திருநாடு ஈழம்
சிந்தை மயங்குமெழில் இயற்கை - அழகுச்
சிம்மா சனமமரும் நாடு.

○ பாரத அன்னைமணிப் பாதம் - மின்னும்
பச்சை மரகதமெம் ஈழம்
நீரில் மிதக்குமொரு ஓடம் - என்னும்
நித்திலத் தீபமெங்கள் நாடு.

○ வான் அளாவி நிற்கும் மலைகள் - ஆங்கு
வயங்கு மலர்ப்பளிங்குச் சுனைகள்
தேன் அளாவுந் தீங் கனிகள் - தூங்கு
தேசு மிகு நந்த வனங்கள்,

○ பொன்னும் நவமணியும் கொழித்துப் - புதுப்
புனலில் பவனி வரும் நதிகள்
அன்னை மடியின் மிசை தவழ்ந்து - நிதம்
அன்னம் பாலிக்கும் நாடு.

○ அலையில் புரளி செயும் ஆறு - கட்டும்
அணையில் அடங்கி நின்று பண்ணை
வயலிற் புகுந்து பயிர் விளைக்கும் - தொல்
வழமை மிகுந்ததெங்கள் தேசம்.

○ ஆதி திராவிடரின் நாடு - மங்கா
அழகுத் தமிழ்புரந்த நாடு
போதி சத்துவரின் சேதி - இன்று
போற்றி வளர்ப்பதுமிந் நாடு.

○ தேயிலை தென்னை ரப்பர் கொக்கோ - நம்
தேச நிதி வளர்க்கும் நல்ல
வாச(னை)த் திரவியங்கள் எல்லாம் - பிறரை
வாரீர் என அழைக்கும் நாடு.

○ மஞ்சள் இஞ்சி இல வங்கம் - மதிப்பு
மிஞ்சு மிளகேலம் கறுவா
கொஞ்சிக் குலாவிவளர் நாடு - பஞ்சம்
அஞ்சி அகலுமெனப் பாடு.

○ மாவலி மாணிக்க கங்கை - வன
மண்ணைப் பிசைந்து பொன் ஆக்கும்
மானிலம் பரவுகதிர் காமம் - மன்
மாசைக் களைந்து மணி ஆக்கும்.

○ கன்னித் தமிழ்ப் புனம் யாழ்ப்பாணம் - இன்பக்
கவிதை உணர்வு தரும் கண்டி
மண்ணில் இசைபாடும் மீன்கள் - தமிழ்
மறவர் திகழ் மட்டக் களப்பு.

○ எங்கள் நகரங்கள் பாப்பா - எழில்
மிஞ்சு கவிதைகளே பாடும்
வங்கம் அலைக்கொதுங்கித் தங்கும் - இயற்கை
வடித்த திருமலை எம்துறையே.

○ "சிவபாதம்" தெய்வஒளி வீசும் - உயர்
சிகிரி சிறந்தகலை பேசும்
அபவாதம் உள்நுழையக் கூசும் - அருமை
அழகுத் தமிழ் ஈழம் வாழி,

## சிறுகதை 7ம் பக்கத் தொடர்ச்சி

உள்ளமும் தந்தானே, காதலிக்கத்தானா?' என்று குறும்பாகக்கேட்பாள். ஆயின், 'ஆதாமைப்படைத்து ஆதரித்துப்பேணியஅவர் அங்கே ஒரு ஏவாளையும் படைத்தது ஏன் என்றாலோ மௌனியாகிவிடுவாள்.

"என்னிதயம் கல்லாக மாறினாலும் அதில் அவளையே சிலையாக வடித்திருப்பேன். ஆனால் அதையும் அவள் பார்க்கமாட்டாள். ஆம்! பார்க்கமாட்டாள். என்னிதயத்தின் தாபத்தை அவள் உணரவில்லை, உணரவில்லை! என் அமுதா! (ஆமாம் இதுதான் அவளின் பெயர்) உணரவேயில்லை!

"நான் இப்படிப் பேதலித்துக் கொண்டிருக்கும் போதுதான் என்னைத்துண்டாடித்துடிக்கப் பண்ணிச் சித்திரைவதைக்கேயாளாக்கிவிட்ட அந்நாட்கள்— துன்பத்தின் நாட்கள் வந்தமைந்தன. அதுதான் நான் அமுதாவைப் பிரிந்த நாள்.

"என் காதலியைப் பிரிந்தேன். ஒருநாள் - ஒருநாள்... அன்று

"ஐயோ! ஐயோ! ஐயோ! எப்படிச்சொல்வது? எதைச் சொல்வது? அது ... அது ... அது ... முடியவில்லை. முடியவில்லை, அந்நிகழ்ச்சியை எழுதவே முடியவில்லை. மறக்கவும் இயலவில்லையே!

"என்னை வஞ்சித்த கொடிய நாட்களே! என் மனதை அறுக்காதே! என் நெஞ்சைத் தீ மயமாக்கிய வேதனையின் நாட்களே என்மனதைப் பொசுக்காதே மறைந்துபோ. மாய்ந்துபோ! அழிந்துபோ! செத்துத்தொலைந்து மக்கி மண்ணாய்ப்போ! போ;

"என் தங்கையாய் வந்த இராணி! அதை உனக்கெழுத எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லையே. உனக்கெப்படியம்மா விளக்கி வைப்பேன்? என் அன்பு, ஆசை, அபிலாஷை, காதல், பாசம் அத்தனையும் ஒருங்கே கூடி பகலிலிட்ட விளக்கானதே. அதை எப்படியம்மா எழுதிடுவேன் எழுத்தில்?"

"மன்னித்துவிடு இராணி!"

"மறக்க முயன்றேன் அமுதாவை. முடியுமா? இனித்தான் அதற்கு முயற்சி பண்ண வேண்டும். மறக்க முயற்சிப்பதே வேதனையின் விதைப்பாயிருக்கும்போது"

"இன்று 'மலர்' பத்திரிகையின் ஆசிரியர். மலரில் நான் படைத்த சிருங்காரச் சிறுகதைகள் அமுதாவின் கண்களினின்று பிறந்திருக்க வேண்டியவை. ஆனால் அவளுருவின் பேழையான என் நெஞ்சத்தினின்று பிறந்துவிட்டன. எத்தனையோ இளம் உள்ளங்களில் இன்பத்தையும் இலட்சியத்தையும் தூவிய அவை நல்லவையாயிருக்கலாம். என் சுந்தரப் பாவையாம் அமுதாவையிட்டுப் பிறந்த அவையத்தனையும் சுந்தரமானவையாகவே இருத்தல் வேண்டும். ஆனால் எனக்கோ...? என் வாழ்க்கைக்கோ...?"

"வாழ்க்கை நடக்கிறதென்றால் ஏதோ 'பசுமை' இருக்கிறதென்றுதானே அர்த்தம். என்னிலும் 'பசுமை' இருக்கவே இருந்தது. ஆயின் அது அமுதாவின் சுகிர்த நினைவுகளாலானது. இன்றோடு அது தீய்ந்துவிட்டது. ஏன் தெரியுமா...?"

"எஞ்சியிருந்த அந்தக் கொஞ்சப் பசுமைதானே இராணியின் இதயத்தில் காதலைப் பயிராக்கியது. அந்தப் பசுமை வேண்டாம். வேண்டவே வேண்டாம்!

"இராணி என்னை மன்னிப்பாள்! நான் அமுதாவிற்காக ஏங்குமாப்போல இராணி எனக்கா[illegible] வேண்டாம். அ[illegible] கொடுமை. அமுதாவே நிறைந்துவிட்ட என்னுள்ளத்தை வேறெவர்க்கும் கொடுக்க நான் தயாராயில்லை.

"இனி என்னால் இங்கிருக்க முடியாது. இத்துடன் இராஜினாமாவும் எழுதிவிட வேண்டியதுதான். ஆமாம்! ஆசிரியர் பதவியும் அதற்காக ஒரு புனைபெயரும் வேண்டாம். இப்போதே துறந்துவிட்டேன். காய்ந்த உள்ளம் கொண்டவனால் கலையை வளர்க்க முடியுமா என்ன?"

எண்ணம் கடிதமாகிறது.

★

'அண்ணன்' என்று கையெழுத்திட்ட கடிதம் இராணிக்குக் கிடைக்கிறது. கும்மாளத்தோடு பிரிக்கிறாள். குதூகலத்தோடு வாசிக்கிறாள்.

அந்தோ! அவளின் தலைக்குள்ளே பிரளயமா?

இமைகள் புற்றீசலாய், கண்கள் சிதறிய நாவலாய், உதடுகள் நஞ்சுண்டவையாய், கைகள் - பல்லியின் அறுந்த வாலாய்...அவளே பிரளயகால நிலைக்காளாகி. உடலே உப்பிலிட்ட மண் புழுவாய் துள்ளி விழுந்து துடித்து கதறி பேதலித்து—

சூடாக்கினாலும் கடல்நீர் கசப்புதான். இராணியின் கண்ணீரென்ன கடல்நீரா?

வாய் பிளந்து ஒப்பாரி வைக்கவேண்டும் போலிருக்கிறது இராணிக்கு. அப்படியே செய்தாலும் அந்தக் குரல் அண்ட சராசரமும் தன்னை நசுக்கிச் சிதைத்துவிட்டதைப் போன்ற இதயத்தின் கூக்குரல்முன் எங்கே எவ்வளவு தொலைக்குக் கேட்கப்போகிறது?

இராணி கனவிலும் சந்திக்க முடியாத ஏமாற்றம். [illegible] திளைத்து, காதலிலேயே வாழ்ந்து, அதன் பேறுக முட்டைகள் பெற்று அவற்றை அடைகாத்து அவையும் பொரித்துக்குஞ்சுகளாகி மழலை மிழற்ற, அந்தச் சுகத்திலே புனலாடிக் கொண்டிருக்கும் போது... ஒருநாள் தாய்மையின் முழுமையைச் சோதிப்பதைப் போல 'கூ, 'கூ' என்ற குரல் கேட்டு குஞ்சுகளைக் கொத்திப் பார்க்க அவை குயிலினமாயிருத்தலைக் கண்டு அவற்றைக் கலைத்துவிட்டு சந்தேகம் தீராததால் தன் குஞ்சுகளையும் கூட குத்திப்பார்க்க அந்த வேதனை தாளாது காகத்தின் குஞ்சுகள் அமரத்துவமெய்தி விட்டால் அப்பொழுது ஏற்படுவதற்கொப்பான மகத்தான சுமை- வேதனை - ஆற்றாமை - வெறுப்பு- விரக்தி-ஏமாற்றம்-துன்பம் அது.

இராணியின் மங்கிய பார்வையில் கபிலரனுப்பிய கடிதம் தென்பட்டு அதில் அவரெழுதிய 'இராணி என்ற அழகிய எழுத்துக்கள் அவளைப் பார்த்து நகைக்கின்றன. அந்தப் பெயரிலுண்டான ஆத்திர வெறியுடன் அதைக் கசக்கி எடுக்கிறாள்.

"இ - ரா ... ணி' ஐயோ! அமுதா என்ற அழகான பெயரிருக்க 'இராணி' என்ற புனைபெயர்தான் ஏன் கொண்டேன் — மனத்தின் ஓலம்.

கடித உறையைக் கிழித்தெறிந்த கரங்கள் கடிதத்தை பத்திரமாக நெஞ்சோடு இணைத்துக் கொள்கின்றன.

அமுதா தன் பட்டு உதடுகளோடுகபிலரின்கடிதத்தை இணைத்துக் கொஞ்சுகிறாள்.

'என் காதலனுக்கு நான் தரும் ஒரேமுத்தம். முடிந்து போன எங்கள் காதலுக்கு நான் தரும் பிரியாவிடை' என முணுமுணுக்கிறது அவளின் இளநுங்குவாய்.

அதே நேரத்தில் இவ் வார்த்தைகளின் ஒலி வடிவம் மடியுமுன்பே அவளித[illegible]யத்திலிருந்து சீற்றம் பிறக்கிறது,

'இல்லை! இல்லை! காதல் பிறந்துவிட்டால் அதற்கு முடிவேயில்லை. காதல் என்றும் வாழ்வது. காதல் சிரஞ்சீவியானது. காதல் இதயத்திலிருப்பது. இதயம் என்றுமே மரிப்பதில்லை. சுகிர்த நினைவுகளின் விளைநிலமே காதல்தான். இலட்சியங்களின் பிறப்பிடமே காதல்தான். எதிர்கால நம்பிக்கைகளின் மலர்மொட்டே காதல்தான். வாழ்க்கையின் ஜீவபூமியே காதல்தான். வாழ்க்கையின் தத்துவம்- தியாகமென்றால், தியாகத்தின்உயிரேகாதல்தான். எங்கள்அன்பின் முடிவில் காதல் பிறந்தது. காதலின் முடிவில் பிரிவு வந்தது. பிரிவின் முடிவில் காதல் ஜனித்தது. ஆமாம்! மீண்டும் காதல் தான்!! அந்தக் காதலின் முடிவு காதலாகவே இருக்கட்டும். காதல்காதலாகவே இருக்க வேண்டும். காதலை நாங்கள் பிரிக்கமாட்டோம். எங்களுக்காகப் படைக்கப் பட்டதல்லகாதல். காதலுக்காகத்தான் நாங்கள். காதல் எங்களை, வேறாக்காது-பிரிக்காது! இது பரிசுத்தமான காதல்"- அமுதாவின் இருதய அடித்தளத்தினின்று பிறந்த இவை ஆவேசச் சீற்றமல்ல; தெய்வீகச் சீற்றம்! ஆம்! தெய்வீகச் சீற்றம்தான்.

அத்தெய்வீகச் சீற்றத்தின் முடிவில் அந்தச் சீற்றத்தின் உந்தலில் அதோ அமுதா புறப்பட்டுவிட்டாள். தன் காதலனிடம் தான். தொடர்ந்து கபிலரின் நெஞ்சத்தில் காதல் இலக்கியங்களை வண்ண வண்ண ஓவியங்களாக காவியங்களாக நவீனங்களாகத் தீட்டப் போகிறாள் இராணி என்ற அமுதா. அவள் வாழ்க!

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்எனும் அடிவானில்...

## ஞாயிறு கதை மலர்

**மு. க. ராஜா**

'மலர்' பத்திரிகையின் ஆசிரியர் கபிலரின் முன் குவிந்திருந்த கடிதங்களில் ஒன்றேயொன்றுதான் காந்தமாகி அவரை இரும்பாக்கியது. அது அவரின் ரசிகை இராணியின் கடிதமென்பது அவருக்கு நன்ருகத் தெரியும். அடிக்கடி அவரையும் 'மலரையும் பாராட்டி எழுதுபவள் அவள். அதுவும் அப்படியானதென்றெண்ணியே பிரித்தார்.

அன்பு கபிலருக்கு,

எப்படி ஆரம்பிப்பதென்றே புரியவில்லை, தங்களின் கதைகள் என்னை உன்மத்தம் கொள்ளச்செய்துவிட்டன.

இம்மாத 'மலரில்' பிரசுரமான தங்களின் 'ரசிகை' என்ற காதல் கதை கற்பனையன்று. அத்தனையும் உண்மை. அதன் கதாநாயகனும் ரசிகையும் நாமிருவருமே என்பதை உணர்ந்துகொண்டேன். தங்களிதயத்தையும்புரிந்துகொண்டேன். இதை மறைக்க 'கற்பனை' என்ற நான்கு அட்சரங்கள்தான் ஏன்?

தங்களின் எழுத்தும் கதைகளும் என் மனத்தை அசைத்து இதமாக வருடித் தங்களின் காதலுக்காகக் கசிந்துருகச்செய்துவிட்டன. தங்களின் அன்புப் பதில் நோக்கிக் காத்திருப்பேன்.

காதல் வணக்கம்.

இப்படிக்கு,

தங்கள் 'இராணி.'

இதை வாசித்து முடித்த கபிலரின் நெஞ்சத்தினின்று சீறிவந்த தீய்ந்துபோன நிகழ்ச்சியொன்றின் சூடான நெடுமூச்சு, அந்நிகழ்ச்சியின் நிழலாய்ப் புகைந்தது. வேதனையுடன் அலற்றத்தொடங்கிவிட்ட அந்த நெஞ்சத்தில் தகாதகொன்றைச் செய்ததன் துடிப்பு.

பேனவை எடுத்தார். தன்நிலையை அவளுக்குப் புரியவைக்க வேண்டுமே. காதலற்றதன்னுள்ளத்தைக் காட்டவேண்டுமே.

☆

''இராணியைச் 'சகோதரி' என்றுதான் விழிக்க வேண்டும். ஆமாம்! சகோதரிதான். நான் இப்படி ஆரம்பிப்பதால் எல்லாம் வாசியாமலே வீசிவிடுவாளா? இல்லையில்லை... முழுவதையும் வாசித்தாளானல் 'சகோதரி என்ற இவ்வுயர்ந்த இடம் சரியானதே என்றுணருவாள்.

''எவருமே அறியாத இவ்வுண்மையை இந்த இராணிக்குக் கூறவேண்டியிருக்கிறதே..., கூருமலும் முடியாதுதான்.

''அப்போது நான் கல்லூரியிற்ருனேயிருந்தேன்? ஆமாம். 'அவளும் கூட அங்கேதான் படித்துக்கொண்டிருந்தாள். கல்லூரியில் நடைபெற்ற விழாவொன்றின்பின்தான் நாமிருவரும் பழகஆரம்பித்தோம். அவளுக்கு முதற்பரிசிலைப் பெற்றுத் தந்த அந்தப் பேச்சு—குயிலினும் இனிய குரல்—எழில்பூத்த தமிழ் உச்சரிப்பு ஐயகோ! நினைத்தால் இப்போதும் செவியெல்லாம் - நெஞ்செல்லாம் மதுவாகி வழிகின்றதே, அந்த மல்லிகைக் குரலை ஏன் கேட்டேன் நான்?

''தமிழ் அவளின் திராட்சைக்குரலால் இனிமைமிகப் பெற்றது என்பது உண்மையிலும் உண்மை. இதைச் சரஸ்வதிதேவியின் தலையிற் கையிருத்தியே சத்தியம் செய்வேனே நான். அவளின் இனிய தமிழிலேயே அவள் கொண்ட குறைகளை மறந்தேன்.

''கோவிலின் உச்சியில் தொங்கும் வெண்கல மணியைப் போல அவளது நுதலில் வீற்றிருந்து ஒளிபாய்ச்சும் திலகம் என்னை மயக்கி தன்னிடம் அழைத்தது.

''எரியும் விளக்குக் கண்ணாடிச் சிமிழையொத்த அவளது கன்னங்கள் தன்னுள் என்னையே பதித்து, 'வா! என்னை வருடிப்பார்' என்றன.

''மந்தமாருதம் கலந்த கண்கள் 'குறுந்தொகைப் பார்வை சொரிந்து என்னைக் கோவலனாக்கிக் களிபேருவகையுற்றன.

''அவள் என் நெஞ்சக் கோவிலின்மணியாளுள். இம் மண்ணகத்து இன்பத்தையெல்லாம் ஆலயம்கொள்வதற்காக என்னை அறைகூவியழைத்தாள். நான் மயக்கமானேன். என்னுள்ளத்தில் மங்கள நாதம் கேட்கவாரம்பித்தது. இப்போதும்கூட என் மார்பில் காது புதைத்தீர்களானல் அந்த மென்மையான பாதசர ஒலியைக் கேட்பீர்கள்.

''இராணி! நீ அதைக் கேட்கப்போகின்ருயா? ஏன்தான் அது?... அந்தச் சுந்தர கானத்தை அதற்குரியவளே கேட்டனுபவிக்காதபோது வேறு எவரேதான் கேட்டாலென்ன, கேட்காதுபோனல் என்ன?

''சேச்சே! என்ன நினைவுகள்! எல்லாம்வானிற்சிதறிய மத்தாப்பு ... கருகட்டும்! தொடர்ந்து வந்த கல்லூரி நிகழ்ச்சிகள் எம்மைப் பிணைத்தன. நவீனங்களும், நூல்களும், இலக்கியங்களும் இப்பிணைப்பை இறுக்கின. எங்களின் உறவு மொட்டாகி, முகையாகி, பூவாகிப் பிஞ்சாகி...

''என்ன! 'உறவு' என்ரு கூறினேன்? அதெப்படிக் கூறமுடியும்? அவளுள்ளம்..

''அவள் துருவ நட்சத்திரமா? உருவமற்ற புதிரா? அவள் ... என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்ட அவள் தன்னுள்ளத்தைப் பற்றிக் கூறவேயில்லைத்தான்.

''என் முயற்சிகள்...?சே! எதைத்தான் உருப்படியாகச்செய்தேன். இயல்பாகவே நான் 'சங்கோஜி.' பெண்களெனில்...... அதுவும் இளநங்கையரென்ருல்..? இதனிடையே நான் கல்லூரியிற் கட்டிக்காத்து வைத்திருந்த நற்பெயர் நல்லெண்ணம் என்ற பூதங்கள் தான் என்னை மிரட்டி என் காதலுக்கே எமனாக நின்று வழிமறித்தன.

''செங்கரும்புச் சொற்களில் எத்தனையெத்தனை காதல்கடிதங்கள் எழுதியிருப்பேன்? அத்தனையும் பேய்க் கரும்பாகினவே. சக்கையையெண்ணிக் குதப்புவதால் என்னபயன்? ம...க்ம்...! ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும், நண்பரிடமும் ஏற்பட்டிருந்த கௌரவம்...... அந்தப்பாழாய்ப்போன கௌரவம் தானே அத்தனை கடிதங்களையும் தன்னுள்ளேயே சமாதியாக்கிக்கொண்டது. ஷாஜகானும்தான் ஒரு காதல் சமாதி எழுப்பினர். நானும் செய்தேனே ஒரு சமாதி.....! கேவலம் அந்த கௌரவம் வந்து இப்போது தோற்றுகிறதா என்ன?

''எவ்வளவு தயங்கினேனே அதனிலும் பன்மடங்காய் அவள் மீதானகாதல் பாற்கடலின் அமுதமாகப் புரண்டு, திரண்டு, கொப்புளித்து மேலே வரும். ஆனல் அந்தோ! அத்தனையும் வழிந்தொழுகி உப்பாயுருகியழிந்ததுவே!

''என்நெஞ்சின் இன்ப நினைவுகளையெல்லாம் தேங்காய்ப்பூவாகத் துருவி எடுத்த அவள், ஒரேயொரு கடிதமேனும் எழுதமாட்டாளா, 'காதலிக்கிறேன்' என்று ஒரு வார்த்தை கூறமாட்டாளா என்றெல்லாம் எத்தனைமுறை ஏங்கியிருப்பேன்? ஏன்தான் அவள் கூறியிருக்கக்கூடாது-என்ருலும் என் ஜீவியத்தில் நான் பூஜித்த ஒரே மலர் அவள்தான்.

''காம்பில் சிவப்பேறிய பவளமல்லிகை மலராகி நாணம் மேலிட என்மார்பில் தவழ்ந்திடுவாள். அள்ளியெடுத்து இதழருகே கொணர்ந்திட்டாலோ அதிகாலை மலராகித் தரையிற் குதித்திடுவாள். அவள்பெண்மையின் பெட்டகமாம்.

"குங்கும நிறமாக மாறிகுன்றிமணியாயுருண்டு அருகில் வருவாள். மென்மையாய்த் தொட்டணைத்து ஒரு முத்தம் கொடுத்திட முனைந்தாலோ பார்வையை முட்களாய்ச் செருகிடுவாள். அவள் ரோஜா மலராம்.

"ம்...! அத்தனையும் கனவில்! என் நெஞ்சின் அலையில்!

'''ரோஜாச்செடியில் முள்ளிருப்பதற்காக ஏன் வருந்த வேண்டும். மலரிருப்பதற்காக மகிழலாமே! என்ற தத்துவத்தைக் கூறுவாள். ஆனல் அவளோ என்னுள்ளத்தில் 'முள்' உறுத்துவதை உணரவில்லை. ரோஜாவான அவளுக்காக எத்தனை முட்கள்மீதும் எறிப்போக நான் சித்தமாயிருப்பதை அவள் அறியவேயில்லை.

'''கண்ணைக் கொடுத்துக் கலையைப் படைத்த கடவுள் இளைஞனைப்படைத்து, மங்கையைப்படைத்து கனிந்த

(6ம் பக்கம் பார்க்க)

'எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் இந்நாட்டு
மன்னர்'

# தீரம்

**கைலாசநாதன்**

அந்த மூன்று நாய்களைப் பொறுத்த மட்டில் 'இது' பொய்தான். அவை ஒன்றையொன்று பார்த்து 'வாள் வாள்' என்று குரைத்துக்கொண்டிருந்தன.

அவை-கறுவல், வெள்ளை, புள்ளி. கறுவல் கொஞ்சம் 'சோம்பேறி தான். குரைக்கவும் பலமில்லை, மற்றவைகளைப் போல விழுந்தடித்து, வாயிலே கிடைப்பவற்றை உண்ணவும் முடியாமை. வெள்ளை நாய் தான் அந்த இரண்டிற்கும் தலைவன். புள்ளி தந்திரசாலி. வெள்ளைக்கு வாலை ஆட்டும்; கறுவலைக் கண்டால் மெல்ல உறுமும். கடிக்கமாட்டாது. நல்ல நாய்.

அந்தச் சந்தியில் தெருவிளக்கில் அம் மூன்று நாய்களும் தங்கள் 'நைற்டியூட்டி'யைச் செவ்வனே செய்து கொண்டிருந்தன. வெள்ளைநாய் தான் 'லீடர்!'

யாரோ ஒரு மனிதன் இரண்டாம்சாமத்தில் படம் பார்த்துவிட்டுப் பிரதான வீதிவழியே 'விர்'ரென்று சைக்கிளிற் பறந்து வந்துகொண்டிருந்தான். அவன் பார்த்த படத்தின்பாட்டை உதடுகள் மெல்ல - ஆனல், சைக்கிளின் வேகத்திற்கும் மேலாகப் பாடிக்கொண்டிருந்தன.

வெள்ளை நாய்க்குப் பொறுக்கவில்லை. தன்னுடைய 'ஆட்சி'யில் வேறு ஜீவன் குறுக்கிடுவதுபோன்ற உணர்வு. உடனே, வந்துகொண்டிருந்த சைக்கிளை முன்புறமாகப் பாய்ந்து மறித்தது. மனிதன் பக்கத்து வேலியோடு மோதியபடி நின்ருன். அவனுக்குப் பயம். கால்களைத் தூக்கிக் 'ஹான்டிலி'ல் வைத்து வேலி மரக்கிளையைத்தாவிப் பிடித்தான்.

வெள்ளை நாய் என்ன வீரமற்றதா? துணிச்சல்தான் இல்லையா? புள்ளி 'வொள் வொள்' என்று உரத்துக் குரைத்தது. கறுவல்பாவம்!

விளக்கொளியில் வீதியில் விழுந்த தனது உடலின் நிழலில் 'ஆராய்ச்சி' நடத்திக்கொண்டிருந்தது. கறுப்பின் பச்சை வெளிச்சத்தில் கறுப்பாகவே விழுமா?

மனிதன் அலறினன். வெள்ளை நாய் அவனைக் கடித்துவிட்டது. இரத்தம் பீறிடத் தொடங்கியது. புள்ளி இடத்தைவிட்டுநழுவிவிட்டது. கறுவல் அடுத்த பொந்தில் மறைந்து நின்றுகொண்டு நடப்பதைக் கவனித்தது. இருளில் இருந்து ஒளியைப் பார்க்கலாமா? ஒளியில் இருந்து இருளைப் பார்க்கலாமா? கறுவலுக்கு 'ஏதோ தெரிந்திருக்கவேண்டும்.

மறுநாட் காலை மூன்று நாய்களுஞ் சந்தித்தன. அதே இடம். ஆனல், தெருவிளக்குக்குப் பதிலாக உலக விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

காலையிலே வேலைக்குச் செல்வோருடைய அரவம், மூன்று நாய்களுக்கும் சங்க [illegible] சந்தியின் முனையில்இருக்கும் தேநீர்க்கடையின் பின்புறமாக நழுவின மூன்றுநாய்களும். பக்கத்துக்கிணற்றிலிருந்து வந்துபாய்ந்த அழுக்கு நீர் மண்ணுடன் கலந்து, துர்நாற்றமடித்தது. வெள்ளைக்கு என்னவோ போல இருந்தது. ஊத்தை பிடித்துவிடுமோ என்ற பயமாக இருக்கலாம்.

மனிதன் சாப்பிட்டுவிட்டு எச்சில் இலையைக் கொண்டு வந்து பின் சாக்கடையில் வீசி எறிந்தான். மிச்ச உணவு சிதறிவிட்டது. வெள்ளை நாய் அவனைப் பார்த்து உறுமியது. புள்ளி வாலையாட்டியபடி இலை போய் விழுந்த இடத்தை நாடி ஓடியது. மிச்சஉணவிற் பெரும்பகுதி எச்சில் இலையுடன் ஒட்டியிருக்குமா?

கறுவல் அந்த இரண்டு நாய்களின் உண்ணும் அழகைப்பார்த்திருந்தது. அதற்குக் கடும்பசி; தனக்குச் சொண்டு இல்லையே என ஏங்கியது. விழுந்து சிதறிவிட்டிருந்த உணவுத்துணுக்குகளை நாநுனியால் ஒட்டணித்தது. பசிஅடங்கவில்லை; விரக்தியும் உக்கிரமும் பொங்கின.

வாசலைப் பின்பாகத்தால் மறைத்து மறித்தபடி வெள்ளை, புள்ளியையும் விரட்டிவிட்டு உணவு உண்பதை 'ரசித்தபடி, நாநீர் சிந்த இளைக்கத்தொடங்கியது.

'படீர்'

'கீக்!'

கறுவல் நொண்டிப்பாய்ந்தது. வெள்ளையையும், புள்ளியையும் காணவில்லை. எச்சில் இலையும் கிடந்த இடத்தில் இல்லை.

அவை வீதிமுனையில் நின்று உண்டன. அது கறுவலுக்கு நன்ருகத் தெரிந்தது. அழாத குறையாக, வழங்க மறுத்த பின் காலைத்தூக்கியபடி 'நொண்டி நொண்டி' நடைபோட்டது.

புள்ளியும் வெள்ளையும் மறைந்துவிட்டன.

கறுவலுக்கு அழுகையே வந்துவிட்டது! விளக்குக் கம்பத்துடன் தலையைச் சாய்த்தவண்ணம் வலித்துக்கொண்டிருந்த காலை ஒரு கல்லில் வைத்துச் சுகப்பட்டது.

'சரக்

"ஹீ! ஹீ !..."

கறுவலின் முதுகோடு உலர்ந்துஒட்டியிருந்த வயிற்றில் பெரிய செங்கற்கட்டி வந்து விழுந்தது.

''நாய்ச் சனியன்களாலை பெரிய தொல்லை" கல்லால் எறிந்த மனிதன் தன் காலில் புதிதாகக் கட்டுப் போட்டிருந்த காயத்தில் வேட்டி உரசாமல் தூக்கியபடி, மறுபடியும் கடைக்குட் சென்றுவிட்டான்.

'அட கடவுளே' என்னை ஏன் நாயாகப்படைத்தாய். வெள்ளையனைப் போல வாய்க்காரனாகவாவது படைக்கக்கூடாதா?

கடவுளை இப்படித்தான் கறுவல் நினைத்துக் கேட்டிருக்கும்.

கறுவல் 'சிந்தனை' செய்தது!

அதைக் கெடுப்பதுபோல அடிபிடி! வீதியிலே ஒருவனைப்புரட்டிப் புரட்டி இரண்டு பேர் அடித்தார்கள். உதைத்தார்கள்.

கறுவல் இடத்தைவிட்டு நழுவி, கிணற்றுக் கட்டின் அருகில் போய்ப்படுத்தது. பக்கத்திலே ஊர்ந்து வந்த நீரிலே ஒரே செம்மை. துணுக்குற்றுப் பார்த்தது. அதனுடைய காலில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது, ஆஸ்பத்திரிக்குப் போகலாமா? அனுமதியில்லையே!

கறுவலுக்கு நரம்புவலி ஏற்பட்டுவிட்டது. நூறுக்குக்

(9ம் பக்கம் பார்க்க)

"லைடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரீ சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Cotton)
லைடன் இன்டஸ்ரீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வானத்தாமரை

— 5 —

இன்று சந்திரமதியின் பிறந்த நாள்.

சந்திரமதி பிறந்தநாள் புரபஸரைப் பொறுத்தவரை ஒரு பொன் நாள். பிள்ளையற்ற அவர்களுக்கும், திரண்டிருந்த அவர்கள் சொத்துக்கும் வாரிசில்லையே என்று அவர்கள் வாடிக்கொண்டிருந்த வேளையில் வந்து பிறந்தவளல்லவா அவள். தன் ஒரே ஒரு பெண்ணை விதம் விதமான கோணங்களில் அலங்கரித்துப்பார்ப்பதில் அவருக்குத் தனிப்பெருமை.

ஆனால் சந்திரமதிக்கோ விருந்து, கேளிக்கைபோன்ற நிகழ்ச்சிகள் பெரும் வெறுப்பையே தந்தன. அவளுக்கு அமைதியான சூழ்நிலையும், தன் இனிய எண்ணங்களை அறுக்காத சுற்றுடலும்தான் தேவைப்பட்டன. வெட்ட வெளியிலே தன் கற்பனை எண்ணங்களுடன் சஞ்சரிக்கும் அந்த இன்பமயமான நிலையை நாடியே அவள் மனம் ஓடிக்கொண்டிருந்தது. ஆனாலும் சிவாவும் கூட விருந்துக்கு வருவான்; அவனையும் பல பெரிய மனிதர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கலாம் என்பன போன்ற சமாதானங்களால் மனதை நிம்மதிப் படுத்திக்கொண்டாள்.

யன்னலை திறந்து பார்த்தாள். விருந்து மண்டபம் வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாதஸ்வர வாத்தியகாரர் காம்போதி ராகத்தின் உச்சக்கட்டத்தில் ஆலாபனை செய்துகொண்டிருந்தார். அவர் நாதஸ்வரம்போகும் பக்கமெல்லாம் தன் தலையை ஆட்டி அவருடன் ஒத்து முழக்கிக்கொண்டிருந்தார் தவில் வித்துவான்.

தன் தலையை உள்பக்கமாகத் திருப்பி நிலைக்கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டாள். கரும் பச்சை வர்ணச் சேலையும், இளம் பசசை நிறமேற் சட்டையும் அவளுக்கு மிகவும் கவர்ச்சிகரமாக அமைந்திருந்தன. ஏதோ, இயற்கையுடன் ஒட்டிய நிறங்களில் ஆடையுடுத்துவதில் அவளுக்குத்தனி விருப்பம்.

படபடத்த இமைச் சிறகுகளுக்கு மேல் வில்லாக வளைந்து நின்ற புருவங்களும், அவற்றுக்கிடையே கம்பீரமாக மின்னிக்கொண்டிருந்த குங்குமப் பொட்டும் அவளுக்கு எழிலூட்டிக்கொண்டிருநதன. வஞ்சிக்கொடியாகவளர்ந்து, அமைதிச் செடியாக நின்றிருந்த அவள் அழகுத் திருமேனியைப் பார்த்த பொழுது, உடலைப்போல உள்ளத்தையும் என்றும் வாழவைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்து உறுதியுடன் நின்றது.

"சந்திரா! விருந்துக்கு நேரமாகிவிட்டது. எவ்வளவு நேரம் தான் உன்னைப் பார்த்து ரசிக்கப் போகிறாய்? வா..." பட்டுவேட்டியும், மடிப்புக்கலையாத சரிகைச் சால்வையுமாக முகமெல்லாம் செழித்த மகிழ்வுடன் நின்றுகொண்டிருந்தார் புரபஸர். அவரது சிவந்த நெஞ்சிலே அள்ளிப் பூசப்பட்டிருந்த சந்தனம், கமகமவென்ற வாசத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

மென்மையாக ஒரு புன்னகையைப் பூத்து விட்டு அவர் பக்கம் திரும்பினாள் சந்திரா. தன்மகளின் அழகைக்கண்டு ஒருமுறை பூரிப்படைய எண்ணிய அவரின் கண்ணில் அந்த வட்ட வடிவமான குங்குமப்பொட்டுக் காட்சியளித்தது.

''என்னம்மா! இனி எனக்குச் சாந்துப்பொட்டு வாங்கும் செலவு வைக்கவே மாட்டாய் போலிருக்கிறதே. குங்குமப் பொட்டிட ஆரம்பித்துவிட்டாய்'என்று சொல்லிச் சிரித்தார் புரபஸர்

— நா. யோகேந்திரநாதன் —

குங்குமப் பொட்டை அவர் நினைப்பூட்டவே, அவள் உடம்பெல்லாம் ஒரு விதமான குளிர் ஓடிப்பரவிப் புல்லரிக்கச் செய்வதை உணர்ந்தாள். கோடிக்கணக்கான இன்ப அலைகளால் உந்தப்பட்டவளாக விருந்து மண்டபத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

விருந்துக் கென்று வந்திருந்த அத்தனை பேருடைய விழிகளும் ஆச்சரியத்துடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தன. ஒரு பேராசிரியருடைய மகள், தமிழ்ப்பண் பாடு பெண்ணுக்கு வகுத்த இலக்கணமே உருவெடுத்து வந்தாற்போல் தலையைக் குனிந்து, ஒரு அடியின்மேல் அடுத்த அடியை வைத்தவாறு நிலமதிராமலும் ஒலியெழுப்பாமலும் வந்தது அவர்களுக்குப் பெரும் வியப்பையளித்தது. ஆனால் அங்கு கூடியிருந்த அத்தனை பேர்களுடைய பார்வைகளிலும் ஒருவனுடைய பார்வை மட்டும் வேறுபட்டு, ஆசையிற் தோய்ந்து கொண்டிருந்தது விரிவுரையாளர் சிவராமன் அவ்வளவு பண்பற்றவன் அல்லவென்றாலும் அவனையறியாமலே சந்திரமதியைத் தன் உடைமையாக்கவேண்டும் போலிருந்தது அவருக்கு.

சந்திராவின் கண்களென்னவோ உணவின் மேல் லயித்திருந்தாலும் எதிரிரேயிருந்து உணவுண்டுகொண்டிருந்த எத்தனையோ பேர்களில் ஒருவனுகவிருந்து உணவை வாயினுலும்தன்னை விழிகளாலும் விழுங்கிக்

(9-ம் பக்கம் பார்க்க)

குறுநாவல்



அழகினுக்கு
மெருகூட்டுங்கள்!

வழவழவென முகத்தில் படிந்திருக்கும்
எண்ணெயை அகற்றி,
சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுவான
யௌவன வனப்பை அளிப்பது
. பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

உங்கள் சருமத்திற்கு புதியதோர் பொலிவு கொடுங்கள். கச்சிதமான தோற்றமளிக்க விரும்பும் யுவதிகள் யாவருக்கும் கிட்டும் இப்பொலிவு எண்ணெய் பசையற்ற மென்மையான பொன்ட்ஸ வெனிஷிங் க்ரீம் சருமத்தை மிருதுவாக்கி, பாதுகாக்கிறது. சருமத்தில் காணப்படும் மாசுமருக்களையும். அகன்ற மயிர்க்கண்களையும் மறைத்து சுகப்படுத்துகிறது. கறும்பருக்கள் தோன்ருதபடி பாதுகாக்கிறது. மிருதுவான பட்டுச் சருமத்தை பெற பொன்டஸ் வெனிஷிங் க்ரீமை தனியாக பாவியுங்கள். களங்கமற்ற தோற்றத்துடன் மணிக்கணக்காக பௌடரை சமமாக நீடித்து நிலைத்திருக்கச்செய்ய, பௌடர் பூசுவதற்கு முன் இக் க்ரீமை அடித்தளமாக பாவியுங்கள்.




சருமத்திற்கு புதியதோர்
மெருகூட்ட
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீரம்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

குறையாத மாட்டிலேயான்கள் தாம் இப்போது கூட்டாளிகள். வெள்ளையையும் புள்ளியையும் கறுவல் மறந்தே போய்விட்டது. மறதி மனிதனின் சொத்தல்லவா?

கறுவல் சிந்தனைசெய்தது! கொஞ்சநாட்கள் கழிந்தன! அதாவது கறுவலின் காலில் ஏற்பட்ட புண்ணில் இருந்து அழுகல் மணம் குடலைப் புரட்டத் தொடங்கிவிட்டது. அதனால் எல்லோரும் அதை அடிக்கத் தொடங்கி விட்டார்கள்.

விரட்டினார்கள்! - கறுவல் ஓட முயன்றது.

எறிந்தார்கள்-அப்பொழுது தப்ப முனைந்தது.

அத்தனையிலும் தோல்வி. காயங்களின் மேல் காயம். 'சொத்தி நாய்' என்று வேற்று மனிதர்கள் அதைச் சொல்லிஅழைப்பது அதற்கு விளங்காமல் இருக்க நியாயமில்லை.

கறுவல் சிந்தனை செய்தது! அந்தச் சந்தியை விட்டு எங்கும் போகவில்லை. ஆனால் ...

எல்லோரும் அதனைப் போக்காட்ட முயன்று தோல்விகண்டார்கள்.

''என்னடா! இந்தச் சொத்தி நாய்க்கு இவ்வளவு திமிர் எண்டால் மனிசருக்கு எப்பிடியிருக்கும்?

யாரோகூறியபடி கல்லால் அடித்தார்கள்.

கறுவல் முதன் முறையாக உறுமத் தொடங்கியது. பின்புபடிமுறையாகத்தனது 'வர்க்கத்தொழிலை நடத்த ஆரம்பித்தது. அதனைக் கண்டு மனிதர்கள் அஞ்சி ஓடினார்கள். தெருக்களிலே சிறுவர்களின் நடமாட்டம் துண்டாகஇல்லை. பெரியவர்களும் இரண்டாவது சாமப் படம் பார்க்கப் போவதும் இப்பொழுது அருமை.

கறுவல் உழைப்பால் உயர்ந்தது, அதற்கு முடிசூட்டிக் கௌரவிக்கத்தான் வெள்ளையும் புள்ளியும் அங்கில்லை. என்றாலும் மனிதர்கள் இருக்கவே இருக்கிறார்கள். எதற்கும் குலம் இனம் நாடு என்ற அடிப்படையில் மட்டும் அல்லாது வேறு பல வழிகளிலும் மாலை சூட்டுவதற்காக...

கறுவலுக்கு பெரிய 'கௌரவம் அதற்கு இப்பொழுது மனிதர்கள் மதிப்பு அளித்து அழைக்கும் பெயர் இதுதான்.

— கறுவல்-சொத்தி-விசர் நாய்.

## வானத்தாமரை

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கும் சிவலிங்கத்தின்மேல் தவழ்ந்து கொண்டிருந்தது.

குனிந்த தலை நிமிர்த்தாமலே, கண்களை மட்டும் உயர்த்தி ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு வந்தாள். ஆனால் சிவலிங்கம் அவள் கண்களிற் தெரியவில்லை. மனவீணையின் தந்தியில் அதிர்ச்சியடித்த அடியால் ஒரு ஓங்கார ஒலி எழுந்து ஓய்ந்தது. திரும்பவும் தன் ஐயத்தைப் போக்கிக்கொள்ள நன்றாகச் சபையைப் பார்த்தாள். சிவலிங்கம் எங்கே? மூளையே குழம்பித் திரவமாக மாறிக் கண்களின் வழியாகக்கொட்டிவிடும் போலிருந்தது. விழிக்கடையில் தேங்கி நின்ற கண்ணீரைச் கிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

நேரமாக, நேரமாக நெஞ்சுக்குள் ஏதோ செய்வது போலவும், உடலின் உஷ்ணநிலையே கூடுவது போலவும், ஒரு இனம் புரியாத உணர்ச்சி அவளை ஆட்கொண்டு அல்லற்பட வைத்தது. அந்த நரக வேதனையை அவளாற்பொறுக்க முடியவில்லை. அவள் மெல்ல எழுந்தாள். விருந்துண்டவர்களின் கண்ககள் வியப்புடன் அவள்மேல் விழுந்தன. அருகேயிருந்த புரபஸர் ஆச்சரியத்துடன் வினவினார், "என்ன சந்திரா?

"அப்பா, தலைவலி தாங்கவே முடியவில்லை", என்று கூறி விட்டு, அவ்விடத்தை விட்டு அகன்று தன் அறையையடைந்தாள். பொங்கி வந்த அழுகை வெள்ளம் பெருக்கெடுத்துத் தலையணையை ஈரமாக்கியது.

சந்திரமதியின் செய்கை புரபஸருக்குப் பெரும் ஆத்திரத்தை மூட்டியது. ஆனாலும் விருந்தினருக்கு விடைகொடுத்து அனுப்புவதற்காகத் தன் முகத்திற் சிரிப்பை வலிந்துவர வழைத்துக்கொண்டிருந்தார். சகலரும்சென்ற பின்பு புரபஸர் விருந்து மண்டபத்தைப் பார்த்தார். அது அவரது மனதைப்போல் வெறிச்சோடிப் போயிருந்தது. ஒரே வீட்டில் இருந்தும் கூட சிவலிங்கம் வராமல் விட்டது சந்திராவுக்குப் பெரிய அதிர்ச்சியளித்தது. எத்தனை சிக்கலிலும் மனச்சோர்வு அடையாத அவள், தன்னை மறந்தவளாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள், சிறிது நேரத்தில் அவள் கண்ணீர் வற்றி விட்டாதாற் போலும், அழுகையை நிறுத்தினாள். சிவலிங்கம் விருந்துக்கு வராத காரணத்தையறிய அவள் மனம்துடியாய்த் துடித்தது. கதவுகளைத் திறந்து திரைச்சீலையை விலக்கினாள். நீண்ட கறுத்த நிழல் அவள்காலடியில் விழுந்தது. திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். புரபஸர் அருணசலத்தின் முகம் என்றுமில்லாதபடி இன்று விகாரமாகக் காட்சியளித்தது.

''சந்திரா, எங்கே போகிறாய்?"

கண்டிப்பு, அதட்டல் நிறைந்த அவளுடைய குரலைக்கேட்டு அவளுடைய நெஞ்சு ஒரு முறை நடுங்கியது. அவருக்கு நெற்றிக் கண் இல்லையயென்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டாள் சந்திரமதி. அவர் பார்வை அப்படியிருந்தது.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

அருணசலம் மீண்டும் கத்தினார். ''எங்கே போகிறாய்?"

நேரே நிமிர்ந்து பார்க்கத் தைரியமற்றவளாக, மாடியின் ஒவ்வொரு படிகளிலும் பரவவிட்டபின், தன் பார்வையைச் சிவலிங்கத்தின் அறைக்கதவுககள்மேல் நிலைகுத்த விட்டாள்.

அருணசலம் அவளது பதிலைப் புரிந்து கொண்டார், '' ஏன்? , என்று கர்ஜித்தார். அவர் குரல் அந்த ஹோலின் நாலு பக்கச்சுவர்களிலும் மோதி, எதிரொலித்துப் பயங்கரமாக இருந்தது.

அந்தக்கத்தலைக் கேட்டுச் சிவலிங்கம் வந்து விடக்கூடாதே என்று அவள் இறைவனை வேண்டியதெல்லாம் பயனற்றுப் போயின. மாடியறைக் கதவுகளின் கண்ணாடிக் கதவுகள் திறந்து கொண்டன.

புரபஸர் போட்ட சத்தத்தில் என்னவோ, ஏதோவென்று, மனைவி லட்சுமியம்மாளும் அவசரமவசரமாக ஓடி வந்தாள்,

சந்திராவுக்கோ மிகவும் அவமானமாகப் போய் விட்டது. நின்று விட்ட கண்ணீர்பிறகும் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. எதுவும் பேசாதவளாக மீண்டும் ஓடிச் சென்று கட்டிலில் விழ்ந்தாள்.

ஆனால் புரபஸரோ விடுவதாக இல்லை. அவள் வேண்டுமென்றே தலையிடியென்று சொல்லித்தன்னை அவமதித்ததாக நினைத்தார். ஆதற்குப் பின்னால் ஏதோ மர்மம் பின்னிக் கிடப்பதாக அவர் அந்தராத்மா சொல்லவே, சந்திராவைத் தொடர்ந்து அறைக்குட் புகுந்தார்.

சந்திராவின் கோலமும், அவள் கண்களில் வழிந்த நீரும் அவர் கோபத்தை ஓரளவுக்கு ஆற்றின. சந்திராவிடம் கடுமையாக நடந்து கொண்டதற்காக அவர் வருத்தப்பட்டார். ஆனால் அவளின் வாயிலிருந்து அவள் ஏன் மாடிக்குச் செல்ல முயன்றாள் என்று அறிய வேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டார்.

அவர் தன் குரலைத்தாழ்த்திக் கொண்டு, அனுதாபம் நிறைந்த குரலில் கேட்டார்:

''அம்மா, சந்திரா! விருந்தைவிட்டு வெளியேறி நீ, ஏனம்மா சிவலிங்கத்தின் அறைக்குப் போகிறாய்?

தகப்பனின் ஆதுரமான அந்தக்கேள்வி அவளுக்குச் சிறிதளவு தைரியத்தைக் கொடுத்தது. அவள் கட்டிலிலேயே மெல்ல எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

"அப்பா! சிவலிங்கம் எங்கள் வீட்டில் தானே இருக்கிறார்?

ஆமாம்!'

அவர் ஏன் விருந்துக்கு வரவில்லை?

அழைக்கவில்லை அதனால் வரவில்லை!'

அருணசலம் சர்வ சாதாரணமாகவும் அமைதியாகவும் சொன்ன அந்த வார்த்தைகள் பல ஆயிரக் கணக்கான வோல்ற் மின்சாரமாகமாறி அவளைத்தாக்கித்தூக்கியெறிந்தன, ''அப்பா!" விரிந்த விழிகளுடன் அழைத்தாள்.

ஒன்றுமறியாதவர் போல் மெல்லச் சிரித்து விட்டு ஏன் சந்திரா?"

அவர் எங்களைப் பற்றி என்ன நினைப்பார் "

மீண்டும் அவர் சிரித்து விட்டுச் சொன்னார்: 'சந்திரா! சிவலிங்கத்தைப்பற்றி எனக்குத் தெரியும். அவன் உலகம் தெரிந்தவன் ஒவ்வொரு மனிதனுக்கும் அந்தஸ்து தராதரம் இருக்கிறதென்பதை அவன் நன்றாக அறிந்தவன்.'

''அதற்காக ?

சிவலிங்கத்தை நான் விருந்துக்கு அழைத்திருந்தாற் கூட அவன் வந்திருக்கமாட்டான். பெரிய பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் கலந்து கொண்ட அந்த விருந்தில் அவனும் கூட இருந்தால் அவர்களுக்கும் அவமானம், அவனுக்கும் வேதனை, எனக்கும் இழுக்கு!

தந்தையின் அந்தஸ்து மோகம் எவ்வளவு தூரம் பரந்து அவர் மனதை ஆட்டிப் படைக்கிறது என்பதை நினைக்கும்பொழுது அவளுக்கு வேதனையாக இருந்தது, அவள் உள்ளத்தில் ஆத்திரம் விளையும் பொழுது அது வேதனையாகத்தான் அறுவடையாவது வழக்கம். 'என்னப்பா எதிரிலிருப்பவரை மனிதராகக் கூட மதிக்க வேண்டாமென்று உங்கள் கௌரவம் சொல்கிறதா? மேல் வீட்டில் அவர் இருக்கும் பொழுது கீழ் வீட்டில் விருந்து நடந்தால் அவருக்குப் பெரிய அவமானமில்லையா, அப்பா?''

அவர் மீண்டும் அமைதியாகப் பதில் சொன்னார். ''சந்திரா! நாம் எங்கள் கௌரவத்தைக் குறைத்து அவர்களுடன் சமமாக நடப்பதனால் நல்லவர்களாக முடியாது. எங்களை நாங்கள் இழக்கும் பொழுது அவர்கள் தாங்கள் உயர்ந்து விடுவதாக நினைக்கிறார்கள். அதனால் வெறும் பூசல்கள் ஏற்படுவதற்குத்தான் வழியமைகிறது. ஆகவே, எதிரிலுள்ளவர்கள் மனம் பக்குவமடையும் வரை, எங்கள் தராதரத்தைக் காக்கவேண்டியது எங்கள் கடமை.'

சிவலிங்கம் அந்தப் பக்குவநிலையை அடைந்தது மட்டுமின்றி. அதற்கப்பாலும் சென்று ஆட்சி புரிகிறான் என்பதை உணராமல் அவர் பேசுகிறாரே என்று வருத்தப்பட்டாள். அப்பா சிவலிங்கம் எங்களுடன் சமமாக வைக்கப்பட வேண்டியவரப்பா!

''சந்திரா! நீ எதைச்சொன்னாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் ஒன்றை மட்டும் சொல்லி வைக்கிறேன். நீ அடிக்கடி சிவலிக்கத்திடம் செல்வதால் நீஅவனுடன் வெளியே திரிவதனால் என் கௌரவம் பாதிக்கப்படலாம்! ஆகவே அவசியமற்ற வேளைகளில் நீ அவனிடம் போவதை நான் விரும்பவில்லை."

''அப்பா!'

''உனக்கு இலக்கிய சர்ச்சைநடத்துவதற்கு உன் நிலையிலுள்ள எத்தனையோ விரிவுரையாளர்கள் காத்திருக்கிறார்கள்."

''அப்பா!"

"இது என் கண்டிப்பான கட்டளை. நீ என் மகளானபடியால் மீறமாட்டாய் என நம்புகிறேன்!" உறுதியான குரலில் கூறிவிட்டு, அவளுடைய பதிலை எதிர்பார்க்காமலே அந்த இடத்தை விட்டுச் சென்றார். கண்ணீர் விடுவதைத் தவிர வேறு எதிலுமே கையாலாகாத சந்திரா, ஏக்கத்துடனும், ஏமாற்றத்துடனும் படுக்கையிற்சாய்ந்தாள். எண்ண யானைகள் இடித்த பொழுதும், இதயக் கோட்டையின் சுவர்கள் நைந்து, நைந்து கொடுத்ததுவே தவிர, முற்றாகவெடித்துச் சிதறிவிடவில்லை.

(தொடரும்)


## வரி விளம்பரம்

நொய்வு, சுசம, நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இறும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தேவை

எமது இலங்காதயாரிப்புக்களை வீட்டுக்குவீடு விற்பனை செய்வதற்குப் பெண்களும், ஓடர்கள் எடுப்பதற்குப் பிரதிநிதிகளும் உடனே தேவை. பெண்களுக்கு வாகன வசதியுண்டு. விண்ணப்பிக்கவும். மனேஜர், இலங்கா லபோறற்றறீஸ்- உடுவில், சுன்னுகம். 265

### CLASSES

Admissions now accepted for G A Q G C E Advanced level, G C E Ordinary level G C E prep; English/Tamil Short hand, Typewriting Book-keeping, Commerce. Sinhala United Institutes Nelliady, Karaveddi/ 107, PointPedro Road, Nallur Jaffna 263

### விற்பனைக்கு

இயந்திரங்களால் இயக்கப்படும் 30×9 1/2, 28×3 1 2, 27 1/2×8 (மூன்று) அளவுகளைக் கொண்ட ஈஸ்றலண்டர் மாதிரி ஐந்து புதிய வள்ளங்கள்-இரண்டு இலுப்பை பலாமரத்தாலும், மூன்று பலாமரத்தாலும் செய்யப்பட்டவை. இயந்திரங்கள் பூட்டப்படாதவை. கடன் வசதி ஒழுங்குகள் செய்யலாம். விபரங்களுக்கு எழுதவும்.

G, A. Peter Fernando, 86 Delasalle Street Mutwal. 45

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்டனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்) தீவொலி (நுவரேலியா)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி காலை, 10-00, பிற்பகல் 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

# பச்சை விளக்கு

REGAL – JAFFNA
NOW SHOWING
Anthony Quinn-Silvana Mangano
in
BARABBAS
(Techniscope-Technirama)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கிழக்கு பாகிஸ்தான் சூறுவளி

# 5000 பேர் மாண்டனர்?

## வீடிழந்தவர்கள் 50 லட்சம்

## "சூறுவளி வீசிய பகுதியில் எவரும் உயிர்பிழைக்கவில்லை"

டாக்கா, மே. 15

கிழக்குப் பாகிஸ்தானில் இரு தினங்களுக்கு முன் வீசிய சூருவளியினுல் ஐயாயிரத்துக்குமதிகமானவர்கள் மாண்டிருககலா"ம் என்று செய்திகள் கூறுகின்றன. ஆயிரத்துக்குமதிகமானவர்கள் பலியாகியிருப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்தக் கோரசம்பவத்தினுல் 30 லட்சம்பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் மண் குடிசைகளில் வாழ்ந்த 50லட்சம் பேர் வீடிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சூருவளி காரணமாக ஆயிரம் படகுகளைக் காணவில்லை.

**"பேரழிவு"**

சூருவளியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானத்தில் சென்று பார்வையிட்ட அரசாங்க உயர் அதிகாரிகள் சூருவளி வீசிய பகுதிகளில் ஒருவருமே உயிர்தப்பி இருக்கமுடியாதென்று அறிவித்துள்ளனர், "பேரழிவு" ஏற்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் அளிக்க பலநாடுகள் முன்வந்திருக்கின்றன.

## சகல பிரஜைகளுக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**சட்டமூலம் பாதுகாப்பு**

அரசியலமைப்புச் சட்டம் திருத்திப்புதிய அமைப்பில் வேறு அம்சங்களுள் முக்கியமாக இங்கே கீழே விபரிக்கப்பெறுபவற்றை உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகள் அடங்கிய அத்தியாயம் ஒன்றைச் சேர்த்தல்வேண்டும் என்று தேசிய அரசாங்கத்தை அகில இலங்கைக் காங்கிரசின் இம்மகாநாடு விஞ்ஞாபிக்கின்றது.

○ இனம், மதம், சாதி, கொள்கை என்ற வேறுபாடு பாராட்டாத வகையில் எல்லாப் பிரஜைகளுக்கும் சட்டத்தில் சமத்துவம் அளித்தல்.

○ இனம், மதம், சாதி, கொள்கைஎன்றவேறுபாடுகள் காரணமாக அரசாங்கம் பாரபட்சம் காட்டாதிருத்தல்.

○ அரசாங்கத்திலும் அரசாங்கத்தின ஆதரவிலும் இயங்கும் கூட்டுத்தாபனங்களிலும் உள்ளூர் ஆட்சி மன்றங்களிலும், உத்தியோகங்களும், பதவி நியமனங்களும் பெறுவதற்கு சமவாய்ப்பளித்தல்.

○ கருத்துரிமை, மதஉரிமை பேச்சுரிமை, அவையுரிமை, கூட்டுரிமை போன்ற உரிமைகள் எல்லோருக்கும் அளிக்கப்படல்வேண்டும்.

○ இத்தீவின் எப்பகுதியிலும் சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்யவும். விரும்பிய வேலையைத் தேடிக்கொள்ளவும், சொத்துக்களை வாங்கவும் தான் விரும்பிய தொழிலையோ, வர்த்தகத்தையோ மேற்கொண்டு நடத்துவதற்கு எந்தப்பிரசையும் உரிமை பெற்றிருத்தல்.

○ இலங்கையில்வசிக்கும்மக்களுக்கு தமக்கென ஒரு புறம்பான மொழியையும் பண்பாட்டையும் உடைய எந்தப்பிரிவினரும் அவைகளைப் பாதுகாத்துப்பேணும் உரிமையையும் பெற்றிருத்தல்.

மொழியுரிமை, குடியுரிமை, குடியேற்றம் முதலிய முக்கிய தேசிய பிரச்னைகளை நீதியாகவும் நியாயமாகவும் நிரந்தரமாகவும் தீர்க்கப்பெற வேண்டின் அவற்றைக் கட்சி அரசியல் எல்லைக்கப்பாற்படுத்தி தேசிய ரீதியில் சர்வகட்சி வட்டமேசை மகாநாட்டில ஆராய்தலே முறையாகும் என்ற தமிழ்க் காங்கிரசின் உணர்வை இம்மகாநாடு மீண்டும் வற்புறுத்துகின்றது. எந்த முடிவையும் ஒரு கட்சி தனித்தோ இருகட்சிகள் கூடியோ மிகத்திறமானவகையில் பெற்ருல் அது தற்காலிகமானதாயும் மயக்கமானதாயும் பொதுமக்களின் பெரும்பான்மையரின் பொதுச்சம்மதத்தைப் பெறமுடியாததாயும் இருக்கும் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வற்புறுத்துகிறது. எனவே, சர்வகட்சி மகாநாடு ஒன்று இலங்கைப் பிரதமர் தாமதமின்றிக் கூட்டித் தேசியப் பிரச்னைகளை ஆராய்ந்து முடிவுகண்டு தேசிய ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

அவ்வாறே தமிழ்ப் பேசும் மக்களுக்கு இலங்கையில் எப்பாகத்தில் வசித்தாலும் தமிழ் உரியதாகும் என்ற அடிப்படையிலேயே மொழிப்பிரச்னைக்கு முடிவு காணமுடியும் என்ற பயபக்தியான ஒன்றை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுதிப்படுத்துகின்றது.

○ தேசிய அரசாங்கத்தில் தமிழ்ப் பேசும் மக்களுக்குரிய நம்பிக்கையைப் பலப்படுத்துவதற்காக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவப் படையினரை எடுப்பதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.

○ அரசாங்க சேவையில் 1956-ஆம் ஆண்டுக்கு முன்னர் சேர்ந்தவர்கள் சிங்களமொழியிலேயே தேர்ச்சி பெருமை காரணமாகத் தண்டிக்கப்படாது காப்பாற்றப் பெறல் வேண்டும்.

1956-ஆம் ஆண்டுக்குமுன் அரசாங்க சேவையிலே சேர்ந்தவர்கள சிங்கள மொழித் தேர்ச்சி அடையவேண்டுமேயானுல் அரசாங்கசேவையில் உள்ளவர்கள் தமிழ்ப் பேசுவோர் சிங்களத்திலும் சிங்களம் பேசுவோர் தமிழிலும் பயிற்சி பெறுதல் வேண்டுமென்ற அடிப்படையிலேயேயிருத்தல் வேண்டும்.

○ அரசாங்க சேவையிற் சேர்வதற்கு இனம், மதம், மொழி என்ற பாகுபாட்டிலே வேற்றுமை, விபரீதம் காட்டல் ஆகாது.

● மொழி, இந்தியபாகிஸ்தானிய வம்சாவழியினரின் குடியுரிமை முதலிய தேசியப் பிரச்னைகளை ஆராய்ந்து சுமுகமாகத் தீர்க்க வழிகாண்பதற்கு எல்லாக் கட்சிகளின் வட்டமேசை மகாநாடு கூட்டுதல்,

மேற்காட்டப் பெற்றவை சம்பந்தமாக இலங்கைப்பிரதமர் ஏற்ற ஒழுங்குகளை எடுக்கும்படி இலங்கைப் பிரதமரை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் இம்மகாநாடு வேண்டுகின்றது.

**பேச்சுக்கள் மூலம் தீர்வு**

இந்திய பாகிஸதானிய வம்சாவளியினரின் பிரச்னைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் வழிகண்டு தீர்ப்பதற்கு இலங்கைப் பிரதமர் எடுத்துவரும் முயற்சிகளை இம்மகாநாடு வரவேற்று இந்திய பாகிஸதானிய வம்சாவளியினரைக் கட்டாயமாக நாடு கடத்தவோ, இலங்கைப் பிரசைகளாகப் பதியப்பெற்ற இந்திய பாகிஸதானியருக்குத் தனிப்பட்ட பிரத்தியேக வாக்காளர் பட்டியலை வைக்கவோ கூடாதென்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் கோரிக்கையை மீண்டும் வற்புறுத்துகின்றது.

**தொழில் அபிவிருத்தி**

தமிழ் பேசும் மக்களிடையே வேலையின்றிக் கஷ்டப்படுகிறவர்களின் தொகை அதிகரித்து வருவதை இம்மகாநாடு அவதானிப்பதோடு துரிதமான தொழில் அபிவிருத்தி செய்தும், நிலம் முதலியவளங்களை விஞ்ஞான முறைப்படி பயன்படுத்தியும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்த்தல் அத்தியாவசியம் என்றும் வற்புறுத்துகின்றது.

தொழில் விருத்தியாளர்கள், துண்கலை நிபுணர்கள் கொண்ட ஒரு ஆலோசனைக்குழுவை நியமித்து வடக்குக் கிழக்குப்பகுதிகளின் பொருளாதாரவளத்தைச் சீர்ப்படுத்திப் பெருக்குவதற்குத் தனிப்பட்ட வர்த்தகருக்கு வழிகாட்ட வேண்டுமென்று அ. இ. த. காங்கிரஸ வர்த்தக நிருவாக சபையை இம்மகாநாடு கேட்கின்றது.

**புதிய திட்டங்கள்**

இதன் பின்னுற் கூறப்படும் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு தேசிய அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்கின்றது.

○ சீமந்துத் தொழிற்சாலையில் உற்பத்தியை இரட்டிப்பது.

○ வடக்கு மாகாணங்களில் ஒரு சீனித் தொழிற்சாலையும் நெசவுத் தொழிற்சாலையும், உரத்தொழிற்சாலையும் நிறுவுதல்.

○ புல்மோட்டையிலுள்ள கனிப்பொருள் மணலை அதன் உபயோகத்திற்கேற்ப பயன்படுத்தி அபிவிருத்திசெய்தல்.

○ [illegible] ளங்களை வளப்படுத்தவும் அபிவிருத்திசெய்யவும் அதோடிணைந்த கைத்தொழில்களை ஆரம்பிப்பதும்;

○ இதுவரையிலும் ஒதுக்கி வைக்கப்பட்ட கவனத்துக் கெடுக்கப்பெருத வேலைத்திட்டங்களையும் சேர்த்துப் பரந்தன் இரசாயன தொழிற்சாலை விஸ்தரிப்பதுவேண்டும்.

○ கிளிநொச்சியிலும் முதூரிலும் செங்கற்களையும் ஓடுகளையும் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளை நிறுவுவது.

○ கருப்பட்டியைச் சுத்திகரித்து சீனியாக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவுதல்.

○ வடக்குக் கிழக்குப்பகுதிகளில் கட்டற்ஜெழிலுக்குத் துறைமுகங்கள் அமைத்தல்,

உலகம் முழுவதும் முன்னேற்றப்பாதைகளை நாடி சமுதாயநல அரசியல்களை அமைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே தமிழ்மக்கள் மத்தியில் உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு வகுப்பினர் இருந்துவருவது சமூக அமைப்புக்கே ஒரு குறைபாடாகும் என்று இம்மகாநாடு மனம்வருந்துகின்றது. எனவே, பிறப்பினுலோ அன்றிச் சாதிபேதத்தினுலோ ஏற்படும் பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளையும் வசதியீனங்களையும் அகற்றுவதற்காகவும் உரிய கல்வி வசதிகளையும் வேலைவாய்ப்புக்களையும் தேடிக் கொடுப்பதற்காகவும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் அயராது உழைக்குமென்ற வாக்குறுதியை இம்மகாநாடு அளிக்கின்றது.

தொழிலாளர்நலஇயக்கத்தை வடக்கு கிழக்கு பகுதிகளில் புதுக்கியமைத்து அதற்குப் புத்துயிர் கொடுக்கவழி வகை எடுத்தல் வேண்டுமென்று அகில இலங்கை தமிழ்க்காங்கிரசின் மகாநாட்டு நிர்வாக சபை கோருகின்றது.

வடபகுதியில் ஒரு பல்கலைக்கழகம் கலை, விஞ்ஞானம், வைத்தியம், பொறியியல், கிழக்குநாட்டு மொழிக்கல்வி முதலியவற்றைக் கற்பிக்கும் வசதிகளுடன் நிறுவப்படல் வேண்டுமென்று தேசிய அரசாங்கத்தை இம்மகாநாடு கோருகின்றது.

## தமிழரின் பிரச்னையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உழைக்கப் முன்வரவேண்டும் என்றும் தேசிய அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கிருேம்,

தேசிய அரசாங்கம் தனது பெயருக்கேற்றுற்போல், வகுப்பு வாதம் சிறுபான்மையோர் ஒடுக்கம் போன்றனவற்றைக்களைந்து சட்டத்தினுல் நிர்வாகத்தில் உரிய இடமளித்து நாட்டைக்காக்கும் என்பது எனது நம்பிக்கை.

**கோரிக்கையை பின்போடுக**

தமிழரசுக் கட்சியினர்கள் சமஷ்டிக்கொள்கைகளைவிட வேண்டும்; அன்றேல் எமது அடிப்படை உரிமைகள் கிடைத்து நாட்டில் சுமூகம் நிலவும்வரை ஒத்திபோடவேண்டுமென்பதே மிகவும் வேண்டுதலாய் விடுக்கின்றேன். மேலும் தமிழரசுக்கட்சினர் கட்சிக்கு இடட்டுள்ள மருட்சிதரும் பெயரைமாற்றி தமிழர்களைப் பிழையான பாதையில் இட்டுச்செல்வதையும் சிங்களவர்களைகுழப்பத்திலாக்குவதையும் தடுக்கும் வண்ணம் தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

**மலைநாட்டுத் தமிழர் பிரச்னை**

மலைநாட்டுத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் பிரஜாவுரிமை பெற்றவர்களை இலங்கையர்களாகவே கருதவேண்டுமே தவிர அவர்களைப் பாரபட்சமான முறையில் நோக்ககூடாது. பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு தனி இடாப்பு முறை வைப்பதை நாம் வன்மையாகக்கண்டிக்கின்ருேம். எல்லோரையும் ஒரே இடாப்பில்தான் பதிய வேண்டுமே தவிர வெவ்வேறான இடாப்புகள் வைத்திருக்கக்கூடாது. அவர்களுக்கும் இந்நாட்டில் உரிமையுண்டு

கடந்த 30 வருடகாலமாக சிங்கள சகோதரர்களுடன் பழகியுள்ளேன். இவ்வுள்ள நல்ல சூழ்நிலைபோல என்றும் இருந்ததில்லை, இரு இனத்தவர்களிடையில் ஐக்கியம் ஏற்பட்டுள்ளது, இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது உரிமைகளை பெற்றுவிடவேண்டியது முக்கியம்.

கடந்த காலத்தில் தேர்தலுக்கு தேர்தல்மொழிப்பிரச்னை தலைதூக்கியுள்ளது. மொழிப் பிரச்னையை இனிமேல் பின்போடமுடியாது, கடைசி முறையாக, ஒரே தட்வையில் தீர்க்கப்படவேண்டும் காலத்திற்கு காலம் கட்சிகள், ஆட்சிபீடம் ஏறவும், இறங்கவும், மொழியை பாவித்துவந்த நிலைமை இனியும் நீடிக்கவிடக்கூடாது இருகட்சிக்கிடையில் ஏற்படும் ஒப்பந்தம் நிரந்தரமாகாது. ஆதலால் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து வட்டமேசை மகாநாடு மூலம், தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க தேசிய அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழர்களின் பிரச்னையை தேசிய அரசாங்கம் மட்டும் தீர்க்கமுடியாது, எல்லாக்கட்சிகளும் சேர்ந்து பிரச்னையை வட்டமேசை மகாநாடு மூலம் தீர்த்தால் பின் மொழிப் பிரச்னை எழமாட்டாது.

## காங்;காரியதரிசி அறி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கப்பெற்ருர்.

தமிழினம் ஒன்றுகவேண்டும் என்றபிப்பிராயத்தைக்கொண்டே எமது கட்சியும் எமது தலைவரும் 1956-ம் ஆண்டில் பல கூட்டங்களை வைத்து சமஷ்டிக் கட்சியின் ஒத்துழைப்பையும் நாடி ஒற்றுமைவராமலிருந்தும் கட்சியை விஸ்தரிக்காது விட்டோம். இதனுல் எங்களைப் பெலன்குறைந்த கட்சியாக மதித்து வந்தனர், 1956-ம் ஆண்டில் எமது தலைவர் மாத்திரம் ஒரே ஒரு அபேட்சகராக தேர்தலில் பங்கு பற்றினுர். எமது ஒற்றுமையை உண்மையாக விரும்பினுர். என்பதற்காகவே அபேட்சகர்களை மற்றைய தொகுதிகளுக்கு நியமியாது விட்டார்.

இன்று எமது கட்சியில் மூன்று திறமையான பாராளுமன்ற உறுப்பினர் இருக்கின்றனர். இம்மூவரும் தேசசேவை சீரிய இலட்சியமாகக் கொண்டவர்கள். இவர்களை முன்வைத்து மறு தொகுதிகளில் ஆக்கவேலைகளை நடத்தவேண்டும். சிறுபான்மைத் தமிழர் என்று கூறப்படுபவர்களின்ட்ய குறைகளை நீக்கவேண்டும். வேலை இல்லாத்திண்டாட்டத்தை ஒழிக்கவேண்டும், தமிழ் உரிமைகளைப் பெற வேண்டும், இந்தப் பிரதான குறைகளை நீக்குவதற்கு எமது கட்சி ஓயாது உறங்காது உழைக்கும் என்று உறுதியாகக் கூறுகின்றேம்."

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 16-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org